# ஜாமக்காரன்
# JAMAKKARAN

ஜா ம க் கா ர ன்

JAMAKKARAN

(ஜாமக்காரனில்) எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து நலமானதை பிடித்துக்கொள்ளுங்கள் 1 தெச. 5:21
ஆவிக்குரியவன் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறான். ஆனாலும் அவன் மற்றொருவறாலும் ஆராய்ந்து நிதானிக்கப்படான். 1 கொரி. 2:15

VOLUME - 6 Reg No.TNBIL/2016/70171 ISSUE - 5
MAY 2022 TAMIL & MALAYALAM
ANNUAL SUBSCRIPTION - Rs.60/= FOREIGN - Rs.600/=

Mob.: No. **9894261333**
0427 - 2387499. E-mail : jamakaran@yahoo.com. Fax: 0427- 2386464. www.jamakaran.com



கர்த்தருக்குள் அன்பானவர்களே !

கர்த்தருடைய கிருபை உங்கள் அனைவரோடும் இருப்பதாக. என்னை நேசிக்கும் வாசகர்கள் யாவரும் Online (NEFT) மூலமாகவும் M.O. காசோலை, DD மூலமாகவும் எனக்கு காணிக்கை அனுப்பி ஆதரித்த யாவருக்கும் நன்றி. காணிக்கை யாவும் **சரியான** நேரத்தில் **தேவைக்கு ஏற்ப** அத்தனையும் தவறாமல் கிடைத்தது. மிக்க நன்றி.

M.O. மூலம் பணம் அனுப்புபவர்களுக்கு மட்டும் தவறாமல் ரசீது அனுப்பிவிடுகிறோம். Online அனுப்புபவர்களின் பெயர் வங்கி புஸ்தகத்தில் காணப்படாததால் ரசீது அனுப்ப இயலவில்லை. சிலர் தொலைபேசியில் அல்லது emailல் பணம் அனுப்பிய விவரங்களை எனக்கு எழுதி தெரிவிப்பதால் பணம் கிடைத்த விவரத்தை உடனே உங்களுக்கு அறிவிக்க முடிகிறது. அதுவும் அதில் தொலைபேசி நெம்பர் எழுதியிருந்தால் உடனே அன்று இரவே ஒவ்வொருவரையும் அழைத்து பேசி குடும்ப விவரங்களை விசாரித்து ஜெபிக்கிறேன். கர்த்தர் தாமே ஊழியத்தை தாங்குபவர்களையும், ஜெபத்தில் தாங்குபவர்களுக்கும் நன்றி கூறுகிறேன்.

இம்மாத பத்திரிகையில் **திருவிருந்து** அல்லது **கர்த்தருடைய மேசையை** குறித்து தெளிவாக எழுதியிருக்கிறேன். அதில் மேற்கொண்டு சந்தேகம் ஏதாகிலும் இருந்தால் கடிதம் எழுதுங்கள் பதில் கடிதத்தில் விளக்கி எழுதுகிறேன்.

தொடர்ந்து உங்கள் அனைவருக்காகவும் ஜெபிக்கிறேன். **- Dr. புஷ்பராஜ்**

# MAY - 2022

# இராப்போஜனம் – திருவிருந்து – COMMUNION



**இயேசு கிறிஸ்துவை** ஏற்றுக்கொண்ட சீஷர்களுக்கும் கிறிஸ்தவ சபைகளுக்கும் இயேசு கொடுத்த பல கட்டளைகளில் ஒன்று **திருவிருந்து** என்ற சடங்காகும். இதை **சாக்கிரமெண்ட்** என்று அழைக்கப்படுகிறது.

உலகில் ஏராளமான **பெயர்களில்** வித்தியாசமான கொள்கைகள் (Denomenation) உள்ள சபைகள் உண்டு. அனைத்து சபைகளிலும் இந்த குறிப்பிட்ட **திருவிருந்து ஆராதனை** இயேசுவின் பாடு - மரணங்களை நினைவு கூறும் **ஐக்கிய விருந்துதான் திருவிருந்து** (COMMUNION) **என்று அழைக்கப்படுகிறது.** (Salvation Army) **இரட்சன்ய சேனை** சபை - **யெகோவா சாட்சிகள்** சபை போன்ற சபைகளில் மட்டும் இந்த திருவிருந்து ஆராதனை அனுஷ்டிப்பது இல்லை. **ஞானஸ்நானம், திருவிருந்து** இவைகள் யாவும் சடங்குகள் என்று கூறி அதை அவர்கள் கைகொள்வதில்லை.

ஒருவிதத்தில் இது **சடங்கு** போன்றது என்றாலும் இது நாம் ஆராதிக்கும் நம் தெய்வம் **இயேசு கிறிஸ்து** நமக்கு கட்டளையிட்ட இரண்டு பிரதான **கட்டளைகளில்** ஒன்றாகும்.

**ஆலோசனை** வேறு - **கட்டளை** வேறு. ஆலோசனைக்கு கீழ்படிவதும் கீழ்படியாததும் அவரவர் ஆவிக்குரிய ஜீவியத்தை பொறுத்தது. ஆனால் **கட்டளைக்கு** கட்டாயம் கிழ்படிபடிந்தாக வேண்டும்.

1) நீங்கள் போய் சகல ஜாதிகளையும் சீஷராக்கி **பிதா, குமாரன், பரிசுத்த** ஆவியினால் **ஞானஸ்நானம் கொடுங்கள்** என்றார். இதில் **கொடுங்கள்** என்பது **கட்டளையாகும்.**

2) திருவிருந்தில் இயேசு கூறும்போது நான் திரும்ப வருமளவும் (இரண்டாம் வருகை) நீங்கள் இதை **கைகொள்ளவேண்டும் என்பது** ஆலோசனையில்லை, **கட்டளையாகும்.** கர்த்தர் **கட்டளைக்கு கீழ்படிவது, நிறைவேற்றுவது** ஒவ்வொரு கிறிஸ்தவர்களுக்கும் அவசியமாகும். **பலியை** பார்க்கிலும் - **கீழ்படிதலைத்தான்** பிதாவும் எதிர்பார்க்கிறார். அதை மிகவும் முக்கியத்துவப் படுத்துகிறார். எந்த கிறிஸ்தவனும் இதை அலட்சியப்படுத்தக்கூடாது.

இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு பிறகு **சபை இருக்கும்.** ஆராதனை நடைபெறும். ஆனால் **ஞானஸ்நானம், திருவிருந்தும்** இருக்காது.

30 வருடங்களுக்கு முன்பே இந்த குறிப்பிட்ட இந்த முக்கியமான விஷயத்தைக் குறித்து சிறிய புஸ்தக வடிவில் வெளியிட விரும்பினேன். கேரளாவில் **மார்தோமா** சபை பிஷப்மார்களில் ஒருவரான மரித்துப்போன Rev. Thomas பிஷப் அவர்கள் திருவிருந்தைக்குறித்து நான் (கோட்டயம்) **மாங்ஙானம்** மார்தோமா சபையில் பிரசங்கித்ததை கேட்டபோது அவர்தான் என்னை இந்த விஷயத்தை குறித்து புஸ்தகமாக வெளியிட கேட்டுக்கொண்டார். எனக்கு நேரம் இல்லாதபடியால் அந்த புஸ்தகத்தை எழுது இயலவில்லை.

ஆனால் இப்போது எழுத சில முக்கிய காரணங்கள் உண்டு. கடந்த வருடம் நான் பிரசங்கித்த இரண்டு CSI சபைகளில் **திருவிருந்து** சம்பந்தமாக பிரச்சனை உருவாகி சபையில் இரண்டு கோஷ்டிகள் **உயர் நீதிமன்றத்தில்** 11 வருடமாக வழக்கு தொடுத்து **நீதிமன்ற தீர்ப்பை** எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறது. இதற்காக சபை காணிக்கையிலிருந்து கோர்ட் **வழக்கு நடத்த** இதுவரை **3 கோடிகள்** செலவழித்துள்ளது. இந்த சாதாரண விஷயத்தை பெரிதுபடுத்தி புற ஜாதியினர் CSI கிறிஸ்தவ சபைக்கு நியாயம் சொல்ல வேண்டிய கேவலமான நிலைக்கு தள்ளப்பட்டது. இது CSI சபைகள் வெட்கப்பட வேண்டிய விஷயமாகும்.

## பிரச்சனை என்ன ?

திருவிருந்தில் **இரண்டு பொருள்கள்** கொடுக்கப்படுகின்றன.

ஒன்று **ரொட்டி** (Wifer). மற்றொன்று **திராட்சை ரசம்** இவைகள் இயேசு கிறிஸ்து பூவுலகில் மனிதர்களின் பாவம் நீங்க மக்களின் பாவத்துக்கு ஈடாக குற்றமற்ற தன்னையே **தண்டனைக்கு** உட்படுத்தி - **காயம்பட்டு** - **இரத்தம் சிந்தி** சிலுவையில் மரித்தார். இதை ஒவ்வொரு கிறிஸ்தவனும் சபை ஆராதனையில் கூடும் போதெல்லாம் **அப்பம்** பிட்டும் - **திராட்சை ரசம்** குடித்தும் தன்னை (இயேசு கிறிஸ்துவை) நினைவு கூற கேட்டுக்கொண்டார். **அப்பம்** இயேசுவின் சரீரத்தை குறிக்கிறது. **திராட்சை ரசம்** இயேசு சிந்திய **இரத்தத்தைக்** குறிக்கிறது.

மனிதர்களாகிய நாம் செய்த பாவத்துக்கு நாம் அனுபவிக்க வேண்டிய தண்டனையை இயேசு கிறிஸ்து தான் ஏற்றுக்கொண்டு நம்மை விடுவிடுத்தார் என்று அர்த்தமாகும்.

**திராட்சை ரசம்** இயேசு கிறிஸ்து சிந்திய **இரத்தம்** என்பதை நினைவுபடுத்துகிறது. அந்த இரத்தம் **எனக்காகத்தான் சிந்தப்பட்டது** என்று யார் விசுவாசித்து **பாவத்தை** அறிக்கையிட்டு அதை விட்டு விடுகிறார்களோ. அப்போதுதான் அந்த இரத்தம் நம் கண்களில் காணப்படாமல் **விசுவாசத்தின் மூலம்** நம்மை கழுவி சுத்திகரிக்கிறது. 1 யோ.1:7 **இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மை சுத்திகரிக்கிறது** என்று வேத வசனம் நமக்கு உறுதியளிக்கிறது.

நாம் **ஜாதி வித்தியாசம்** பாராமல் இவைகளை நினைவு கூற **ஒரே பாத்திரத்தில்** பாணம் பன்னி ஒரே அப்பத்தில் பங்குகொண்டு புசித்து **நம் ஐக்கியத்தை** வெளிப்படுத்த இயேசு கிறிஸ்து சீஷர்களுக்கு செயல் முறையில் செய்து காட்டி போதித்தார்.

### நீதிமன்றம் சென்ற CSI சபையின் பிரச்சனை என்னவென்றால்

**திருவிருந்து** கைக்கொள்ள சபை மக்கள் **ஆல்டருக்கு** வந்து முழங்கால் படியிட்டஉடன் ஒரே

**பாத்திரத்தில் திராட்சை ரசம்** பரிமாற ஆயர் ( பாஸ்டர்) ஒவ்வொருவர் வாயில் கொண்டுவந்து **பாத்திர விளிம்பை** வைப்பார். அவர்கள் கை உரிந்து குடித்தவுடன் ஆயர் தன் கையில் உள்ள துணியினால் அந்த பாத்திரத்தின் வாயை துடைத்து சுத்தம் செய்து அடுத்தவருக்கு கொடுப்பார்.

அப்படி கொடுக்கும்போது ஒரு நாள் அருகில் இருந்த ஒரு சகோதரியின் **உதட்டு சாயம்** (லிப்ஸ்டிக்) பொடிப்பொடியாக அந்த **திராட்சை ரசத்தில் மிதந்ததை** அடுத்த நபர் கண்டு அந்த **பெண் உதட்டில்** தடவி இருந்த உதட்டு சாயம் கலந்ததை நான் குடிக்கமாட்டேன் என்று எழுந்து நின்று கொண்டார். உடனே ஆயர் அதை கண்டு பதறிப்போய் ஒரு ஸ்பூனில் பாத்திரத்தில் மிதந்த அந்த **உதட்டு சாயப்பொடியை** மேலாக எடுத்து டேபிளில் ஒரு பக்கத்தில் வீசிவிட்டு மறுபடியும் திருவிருந்து கொடுக்க வந்தார்.

ஆனால் அந்த நபரோ என்னதான் சாயத்தை ஸ்பூனில் நீங்கள் எடுத்து எறிந்தாலும் உதட்டு சாயம் அந்த பாத்திரத்தில் உள்ள எல்லா ரசத்திலும் கலந்திருக்குமே ! என்று கூறி **அப்பத்தை** மட்டும் விழுங்கிவிட்டு **திராட்சை ரசம்** பருகாமல் வெளியேறிவிட்டார். உடனே மற்ற ஆண்களும் எழுந்துவிட்டனர். பிறகு அந்த பாத்திரத்தை அப்படியே வைத்துவிட்டு **வேறு பாத்திரத்தில்** திராட்ச ரசம் ஊற்றி ஜெபித்து மீதியுள்ள ஆண்களுக்கு தனியாக கொடுத்து அன்றைய திருவிருந்து ஆராதனையை ஒருவழியாக முடிந்தது. சபை சட்டப்படி மீதியுள்ள திராட்சை ரசம் கீழே கொட்டகூடாது. **ஆயர்களே** அதை முழுவதும் குடித்து தீர்க்க வேண்டும். இதுதான் சபையின் சட்டம். அதன்படியே உதட்டு சாயம் கலந்த மீதி திராட்சை ரசம் முழுவதையும் **ஆயரே** முக்கி, முக்கி வேண்டா வெருப்பாக குடித்து தீர்த்து **பாத்திரத்தை துடைத்து வைத்து** ஆசீர்வாதம் கூறி அன்றைய ஆராதனையை ஒருவழியாக முடித்தார். அபபோது துடங்கிய பிரச்சனை தான் **நீதிமன்றம்** வரை சென்று பல வருடங்களாக வழக்கு நடந்து கொண்டிருக்கிறது.

இப்போது அதே சபையில் இரண்டு ஆராதனை நடக்கிறது. **முதல் ஆராதனை** பொதுவான (Common Cup) பாத்திரத்தில் குடிக்க விரும்புகிறவர்களுக்காக நடத்தப்படுகிறது.

**இரண்டாவது** ஆராதனையில் தனி தனி சிறு **கப்களில்** திராட்சை ரசம் நிரப்பி அவரவர் கையில் கொடுத்துவிடும் முறையை விரும்புகிறவர்களுக்காக நடத்தப்படுகிறது.

இவர்கள் ஒன்றாக ஆராதிக்க நீதிமன்ற தீர்ப்பை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். இதுதான் பிரச்சனை அவர்களே பேசி தீர்த்துக்கொண்டிருக்கலாம். நீதிமன்றம் வரை போயிருக்க வேண்டாம். இப்போது அந்த CSI சபை இரண்டாக உடைந்து தனித்தனியாகப் ஆராதிக்கிறார்கள்.

**வேத வசனம் போதிப்பதை கவனியுங்கள்** (1 கொ. 6:1-5,6)

**5ம் வசனம்** உங்களுக்கு வெட்கம் உண்டாகும்படி இதை சொல்லுகிறேன் சகோதரனுக்கும் - சகோதரனுக்கும் உண்டான வழக்கைத் தீர்க்கத்தக்க விவேகி ஒருவனாகிலும் உங்களுக்குள் (உங்கள் சபையில் உங்கள் டையோசிஸ்ஸில்) இல்லையா?

**1ம் வசனம்** (உங்களுக்குள்) வழக்குண்டானால் வழக்காடும்படி - அவன் (சபை) பரிசுத்தவான்களிடத்தில் போகாமல் அநீதிக்காரரிடத்தில் போகத் துனிகிறதென்ன?

**4ம் வசனம்** (உங்களால் பிரச்சனை தீர்க்க முடியாவிட்டால்) சபையில் தீர்ப்பு செய்கிறதற்கு சபையில்

(உள்ள விசுவாசிகளில்) அற்பமாய் என்னப்பட்டவர்களை (திர்ப்பு சொல்ல) நியமித்துக்கொள்ளுங்கள்.

**திருவிருந்தின் நோக்கம்**

மேலே குறிப்பிட்ட CSI சபையின் பிரச்சனை என்னவென்றால் திராட்சை ரசத்தை **ஒரே பாத்திரத்தில்** குடிப்பதா ? **தனி சிறு கப்களில்** ஊற்றி குடிப்பதா ? என்பதுதான். இப்படிப்பட்ட பிரச்சனைக்கு ஒரே காரணம் **திருவிருந்தை** கைக் கொள்வதின் **அடிப்படை நோக்கத்தை** இவர்கள் அறியவில்லை.

**ஆப்பிரிக்கா** நாட்டின் மிஷனரி டாக்டர் **லிவிஸ்டன்** அவர்கள் ஆப்பிரிக்கா காட்டு விசுவாசிகளுக்கு திருவிருந்து கொடுக்கும்போது அனேக முறை **பாத்திரத்துக்கு** பதில் **தேங்காய் செரடு** (தேங்காய் மூடி) எடுத்து அதில்தான் திருவிருந்து ஆராதனை நடத்தினார். **அப்பம், திராட்சை ரசம்** தீர்ந்துவிட்டது. உடனே **தேங்காயை** உடைத்து **இளநீரை** ஆசீர்வதித்து இது உங்களுக்காக சிந்தின **என்னுடய இரத்தம்**, இதை வாங்கி குடியுங்கள் என்னை நினைவு கூறும்படி இதை செய்யுங்கள் என்று கூறி, **தேங்காயை துண்டு துண்டாக** நறுக்கி இது **என்னுடைய சரீரம்** இதை வாங்கி **புசியுங்கள்** என்றார்.

இந்த மிஷனரி செய்தது தவறு என்கிறீர்களா? இல்லை ! இயேசு சொன்னார் என்னை **நினைவு கூறுவதற்கு** இதை செய்யுங்கள் என்றார். ஆகவே இயேசுவின் பாடு, மரணத்தை நினைவு கூற **பாத்திரமா? சிறிய கப்பா ?** என்பது முக்கியமல்ல. **என்ன நோக்கத்தோடு** இந்த பந்தியில் சேர்த்து **திருவிருந்தில்** (பரிசுத்த மேசையில்) பங்கு கொள்கிறோம் என்பதுதான் மிக முக்கியம்.

பலர் திருவிருந்தின் **நோக்கம் - கன்டிஷன் - தண்டனை** இவைகளைக் குறித்து அறியாமல் ஏதோ வழி ஓரத்தில் உள்ள டீ கடையில் டீ குடிப்பதை போல் திருவிருத்தை அலட்சியப்படுத்தி பங்குகொள்கிறார்கள்.

வேறு சிலர் சபைகளின் சட்டத்தின்படி **3 முறை** திருவிருந்தில் பங்கு கொள்ளாவிடில் சபை எலக்ஷனில் **பதவியில்** நிற்க முடியாது என்பதற்காக **மூன்று முறை** திருவிருந்தை கைக் கொண்டு தேர்தலுக்கு தகுதி படுத்திக்கொள்கிறார்கள். இப்படி இதை ஒரு சடங்காக கைக்கொள்கிறார்கள்.

இன்றைய சபைகளில் **பெரும்பாலோர் மதுபானத்தக்கு** அடிமையாகி வாரமெல்லாம் நன்றாக **குடித்து வெறித்துவிட்டு** ஞாயிற்றுக்கிழமை மட்டும் பெரும் **யோக்கியர்களைப்போல் திருவிருந்து** கைக்கொள்கிறார்கள்.

ஜாக்கிறதை ! திருவிருந்தில் விளையாடாதீர்கள் 1 கொரி 10:20 நீங்கள் **கர்த்தருடைய பாத்திரத்திலும் பேய்களுடைய பாத்திரத்திலும்** பாணம் பண்ணக்கூடாதே !

நீங்கள் **கர்த்தருடைய போஜன பந்திக்கும் பேய்களுடைய போஜன பந்திக்கும்** பங்குள்ளவர்களாக இருக்க கூடாதே! எத்தனை தெளிவாக பவுல் திருவிருந்தைப்பற்றி விளக்குகிறார் பாருங்கள்.

திருவிருந்தைப்பற்றி (பரிசுத்த மேசை) **பவுலுக்கு அருளப்பட்ட வெளிப்பாடு.**

திருவிருந்தைப்பற்றி **இயேசு கிறிஸ்து** சிலுவை மரணத்துக்கு புறப்படுவதற்குமுன் இந்த திருவிருந்தை நடத்திக்காட்டி இதை தொடர்ந்து கைக்கொண்டு **இரண்டாம் வருகை வரை** இதை தொடர கட்டளையிட்டார். ஆனால்...

இந்த திருவிருந்தை **கைக்கொள்ள வேண்டியவர் யார்? அவர்களின் தகுதி என்ன ? தகுதியில்லாமல்** கைக்கொண்டால் வரும் **தண்டனை என்ன ?** என்பதைப்பற்றி யெல்லாம் இயேசு கூறவில்லை.

அவைகளைப்பற்றி விளக்கமாக கூற தான் தெரிந்தெடுத்த 12 சீஷர்கள் **அல்லாத** வெளியில் **வேறு ஒருவரை** தன் சீஷனாக்கி **தகுதிகளைப்பற்றி போதிக்கும் பொருப்பை** அவர் கையில் ஒப்புக்கொடுத்தார். அவர்தான் **பவுல்.**

இவர் **இயேசுவை** நேரில் பார்க்காதவர். இயேசுவை **நேரில்** கண்டவரும் இயேசு செய்த **அற்புதங்களை,** பிரசங்கங்களை **நேரில்** கேட்டவரும்தான் இயேசு தெரிந்தெடுத்த அப்போஸ்தலர்களாக இருக்கமுடியும். யூதாஸ் காரியூத் தற்கொலை செய்து செத்தவுடன், அந்த ஸ்தானத்தில் **மேத்யூ** என்பவனை சீஷர்கள் குலுக்குசீட்டு போட்டு தெரிந்தெடுத்தார்கள். ஆனால், அந்த தெரிந்தெடுப்பை கர்த்தர் ஏற்கவில்லை. ஆகவே கிறிஸ்தவர்களுக்கு எதிரியாய் இருந்தவனும் கிறிஸ்தவர்களை கொலை செய்தவனுமான **சவுல்** என்பவனை இயேசு முன்பே தெரிந்தெடுத்து விட்டார். தமஸ்துவுக்கு போகும் பாதையில் அவன் கண்களை குருடாக்கி அதன்பின் கர்த்தரே தன் ஊழியனை அவன் வீட்டுக்கு நேரில் அனுப்பி **அவன் கண்களை** சுகமாக்கியவுடன் **இயேசுவே தெய்வம்,** இயேசுவே **மேசியா** என்று தாமதிக்காமல் யாவருக்கும் அறிவிக்க சென்றுவிட்டான் என்றாலும் தான் தெரிந்தெடுத்த **சீஷனாக** ஊழியம் செய்ய அவனை **தகுதிபடுத்த** அவனை **அரேபியாவிலுள்ள பாலைவன பிரதேசத்துக்கு** கொண்டுபோனார். அங்கு **மூன்று வருடம்** இயேசு **அவனுக்கு முழுவதுமாய் தன்னை வெளிபடுத்தினார்.** கலா. 1:16-18 அப்போது **சவுலை - பவுலாக** மாற்றி ஆவியிலே அவனை கொண்டுபோய் இயேசு **தான் பிறந்த ஊர்** பெத்லகேமில் சம்பவித்ததையும் **சிறுவயதில்** ஆலயத்தில் பிரசங்கித்ததையும் **கானாவூர் கலியாண அற்புதம், செத்துப்போன லாசருவை** உயிரோடு எழுப்பியது இப்படி இயேசு வாழ்ந்த காலத்தில் **சம்பவித்ததெல்லாவற்றையும்** Flash Back காண்பிப்பதை போல் காண்பித்து கடைசியாக **சிலுவையில்** அறையப்படும் முன் சீஷர்களோடு பங்கொண்ட **திருவிருந்து** நிகழ்ச்சி யாவையும் நேரில் காண்பித்து தான் சிலுவையில் **பட்ட வேதனை, மரணம்** பின் **உயிரோடு** எழும்பிய நிகழ்ச்சிகள் அத்தனையும் **நேரில் பார்ப்பதைப்போல்** ஆவியில் அவனை நிறப்பி இயேசு காண்பித்தார் இயேசுவின் சீஷனாகும் தகுதி பெற்றபின் **இரண்டு முறை** இயேசுவை கண்டதாக கூறினான். ஒன்று தரிசனத்தில் கண்டதாகவும் இரண்டு **ஞான திருஷ்டியில்** கண்டதாகவும் பவுல் கூறுகிறார். இப்படி முழு தகுதி பெற்ற பின் கர்த்தர் தன்னை **அப்போஸ்தலனாக** ஏற்றுக்கொண்டார் என்று பவுல் கூறுகிறார்.

அந்த கூழ்நிலையில்தான் **திருவிருந்து** நிகழ்ச்சியை இயேசு பவுலுக்கு காட்டியுள்ளார். மேலும் திருவிருந்து எடுக்கவுள்ள **தகுதியைப்பற்றியும்**. எடுத்தால் அதனால் ஏற்படும் **விளைவுகள், ஆபத்துகள்** யாவையும் கர்த்தர் **பவுலிடம் வெளிப்படுத்தியிருக்கிறார்.** ஆகவே பவுல் **கொரிந்து**

**சபைக்கு** கடிதம் எழுதும் போது (1 கொரி 11:23ம் வசனத்தில்) **நான் உங்களுக்கு கூறியதை கர்த்தரிடமிருந்து பெற்றுக்கொண்டேன்** என்று ஆரம்பிக்கிறார். திருவிருந்தின் விளக்கத்தை நான் **பேதுருவிடமிருந்தோ யோவானிடமிருந்தோ** வேறு யாரிடமிருந்தும் பெறவில்லை. **இயேசு கிறிஸ்துவிடமிருந்து நேரிடையாக** அறிந்துக் கொண்டேன் என்று கூறுவதைப்போல் யூகிக்கலாம்.

இப்படி கூறும்போதுதான் **திருவிருந்து** கைக்கொள்பவர்களின் **தகுதி என்ன** என்பதை கூறுகிறார். இந்த திருவிருந்தை கைக்கொள்ளுமுன் **தற்பரிசோதனை** தேவை என்கிறார்.

1 கொரி. 11:28 எந்த மனுஷனும் **தன்னைத்தானே சோதித்தறிந்து** இந்த **அப்பத்தை புசித்து** இந்த பாத்திரத்தில் பாணம் பன்னக் கடவன் என்று கூறுகிறார். அதாவது **கொடுப்பவன்** யார்? **பக்கத்தில் உள்ளவன் யார்?** என்பதை நீ ஆராய வேண்டாம். திருவிருந்தை கைக்கொள்ளும் **நீ யோக்கிமா? உனக்கு தகுதி உண்டா? உன் பாவம்** மண்ணிக்கப்பட்டிருக்கிறதா ? **நீ இயேசுவின் இரத்தத்தால்** கழுவப்பட்டவன் தானா ? என்பதை **ஆராய்ந்து பார்** என்று கூறுவதாக இந்த வசனத்தை அர்த்தப்படுத்தலாம்.

***தற்பரிசோதனையில் என்னவெல்லாம் பரிசோதிக்கபடவேண்டும்***

முதலாவது **கிறிஸ்தவ** சபை என்பது **மனம்திரும்பி இரட்சிக்கப்பட்ட** விசுவாசிகளின் ஐக்கியமாகும். மனம் திரும்பாதவர்கள் **சபையில் அங்கமாக** இருக்கக்கூடாது. திருவிருந்தும கைக்கொள்ளக்கூடாது.

இப்போதுள்ள சபைகளான **மார்தோமா** சபை, **லூத்தரன்** சபை, CSI, CNI போன்ற மெயின் லைன் சபைகளின் சட்டம் என்னவென்றால்

1) அவன் **குழந்தையில்** ஞானஸ்நானம் எடுத்திருக்க வேண்டும். **குழந்தையில்** எடுப்பது **ஞானஸ்நானம்** அல்ல என்பதை அறிய வேண்டும். **ஞானம் வந்தபின்** எடுப்பதுதான் **ஞானஸ்நானம்.** குழந்தையில் **பெயர் கொடுத்து பிரதிஷ்டை செய்யலாம்.** இந்த உண்மை எல்லா **ஆயர்களுக்கும். பிஷப்மார்களுக்கும்**, **வேதாகம கல்லூரியில்** படிப்பவர்களுக்கும் மிக நன்றாக தெரியும்.

ஆனால், **தான் சார்ந்த சபையின் உபதேச சட்டம்** அப்படி எழுதியிருந்ப்பதால் அதை மீறி இவர்கள் ஒன்றும் கூறக்கூடாது. இவர்கள் வேதத்தில் இருப்பதைபோல **முழுகி ஞானஸ்நானம்** எடுப்பதுதான் சரி என்று உபதேசித்தால் **சபையிலிருந்தே நீக்கிவிடுவார்கள்.** Excommunicate **குழந்தைக்கு ஞானஸ்நானம் கெடுத்ததாக வேதத்தில் எந்த வசனத்திலும் எழுதப்பட வில்லை** என்பது இவர்களுக்கும் தெரியும்.

இது சபை சரித்திரத்தில் **கான்ஸ்டன்டைன்** ராஜாவின் காலத்துக்குபின் உண்டான **இடை சொருகலாகும்.** அன்றைய காலகட்டத்தில் **கத்தோலிக்க** சபையிலிருந்து **மார்ட்டின் லூத்தர்** காலத்தில் சபையில் உண்டான **மறுமலர்ச்சி கால** கட்டத்தில் சபையிலும் சபை சட்டதிட்டங்களிலும் **பெரும் மாற்றங்கள்** உண்டானது. ஆனால் **ஞானஸ்நானத்தில்** மட்டும் **கத்தோலிக்கர் கைக்கொண்ட** குழந்தை ஞானஸ்நானத்தை **விட மனமில்லாமல் போனார்கள்.**

***சரி சபையில் ஒருவர் அங்கத்தினாக வேண்டும் என்றால் அவன் ஞானஸ்நானம் பெற்றிக்கவேண்டும்.***

2) **திருவிருந்து எடுத்திருக்கவேண்டும்.** திருவிருந்து எடுக்க வேண்டுமானால் அவன் **திடப்படுத்துதல்** (Conformation) என்ற சடங்கை நிறைவேற்ற வேண்டும். அதாவது திருவிருந்து எப்படி எடுக்கவேண்டும் என்றும் **விசுவாச பிரமானம், பரமண்டல ஜெபம் பொதுவான பாவ அறிக்கை** இவைகளையெல்லாம் **மனப்பாடமாக** சொல்ல வேண்டும். அவ்வளவே. ஆனால் **மனந்திரும்புதலைப்** பற்றியோ **பாவ மண்ணிப்பை** பற்றியோ சொல்லி கொடுப்பதில்லை. ஆகவே இப்படி **சடங்கு** அல்லது **ஒழுங்கு** என்ற பெயரில் **திடப்படுத்துதல்** எடுத்துவிட்டால் முதல் **திருவிருந்தை** அவர்களுக்கு கொடுப்பார்கள். அந்த நிகழ்ச்சியை **ஒரு திருமண நிகழ்ச்சிபோல்** வீட்டில் சபையில் **விருந்து வைத்து** ஒரே ஆர்பாட்டமாக கொண்டாடுவார்கள். **வேதம்** இதைப்பற்றி என்ன சொல்லுகிறது என்பதை கவனிக்காமல் **சபை என்ன சொல்கிறது** என்பதற்குதான் முக்கியத்துவம் கொடுப்பார்கள்.

புதிய ஏற்பாட்டு **முதல் சபையை** கர்த்தர்தான் **ஆரம்பித்து வைத்தார்.** அப். 2:47 **இரட்சிக்கப்படுகிறவர்களை கர்த்தர் அநுதினமும் சபையிலே சேர்த்துக்கொண்டு வந்தார்** என்று வேதம் கூறுகிறது.

அப்படியானால் **இரட்சிக்கப்பட்டவர்களைத்தான்** தான் ஆரம்பித்த **முதல் சபையில்** கர்த்தர் சேர்த்துக்கொண்டு அதை நமக்கு **முன் மாதிரியாக** வைத்தார்.

ஆனால் இப்போதுள்ள **மெயின் லைன்** சபையில் இரட்சிப்புக்கு முக்கியத்துவம் கொடுப்பதில்லை. அதனால்தான் **மனம் திரும்பாதவர்கள்** திடப்படுத்துதல் எடுத்தபின் திருவிருந்தில் பங்குகொண்டு **இரட்சிக்கப்படாதவர்களாய்** சபையில் **அங்கத்தினர்களாக** சேர்த்துவிடுகிறார்கள்.

இந்த **அங்கத்தினர்களில்** இருந்துதான் சபை **நிர்வாக கமிட்டி** பொருப்பாளர்கள் தெரிந்தெடுக்கப்படுகிறார்கள். இந்த **இரட்சிக்கப்படாத அங்கத்தினர்களிலிருந்துதான் சபை ஆயர்கள்** நியமிக்கப்படுகிறார்கள். **இரட்சிக்கப்படாத ஆயர்களிலிருந்துதான் பிஷப்மார், மாடரேட்டர்** ஆகியவர் தெரிந்தெடுக்கப்படுகிறார்கள். ஆகவேதான் மெயின் லைன் சபைகள் இரட்சிக்கப்படாதவர்களின் கூட்டமாக காணப்படுகிறது.

அப்படியானால் தவறு சபைமக்களிலிருந்து ஆரம்பிக்கிறது. இப்படி இரட்சிக்கப்படாதவர்கள் சபை **நிர்வாகிகள், ஆயர், பிஷப், மாடரேட்டர்** ஆகியவர்களாக **உருவாவதால்** பாவம் **சபைக்குள் பிரவேசித்து** சபை **காணிக்கை** பணத்திதை துணிகரமாக திருடுகிறார்கள். **பிஷப் முதல் மாடரேட்டர் வரை** ஊழல் உள்ள **தலைவர்கள்** எழும்பி கோடி கணக்கில் **பணம் கையாடல்** செய்யப்படுகிறது. அகப்பட்ட பிஷப்மார் **ஜெயிலுக்கும்** அனுப்பப்படுகிற அவல நிலை CSI, லூத்தரன் சபைகளில் பெருக ஆரம்பித்துவிட்டது.

இதற்கெல்லாம் அடிப்படை காரணம் மக்கள் மனம் திரும்புதலின் அனுபவமில்லாதவர் களாய் **சபையில் அங்கத்தினர்களாக** இருப்பதுதான்.

ஆகவே **இரட்சிக்கப்பட்ட விசுவாசிகள்** ஒன்று கூடி தங்கள் **ஐக்கியத்தை** காண்பிக்கவும் தொடர்ந்து இயேசுவின் இரத்தத்தின் அடிப்படையில் **நிலைத்திருக்கவும்**. அடிக்கடி அல்லது

ஒவ்வொரு வாரமும் ஆராதனையில் கூடும் போது இந்த திருவிருந்து ஐக்கியத்தில் பங்குகொள்வது மிக அவசியம்.

**திருவிருந்து எப்போது கைக்கொள்ள வேண்டும்**

குறிப்பிட்ட நாளை வேதம் அறிவிக்கவில்லை. **ஆதி திருச்சபை** சிறிய கூட்டமாக கூடிவந்ததால் **இவர்கள் கூடும் நாட்களிலெல்லாம்** திருவிருந்தை அனுஷ்டித்து வந்தார்கள். சபை மக்களின் எண்ணிக்கை கூடஆரம்பித்தவுடன் **வாரத்தின் முதல் நாள்** அதாவது **ஞாயிற்றுக்கிழமை** ஆராதனையில் திருவிருந்து கைக்கொண்டார்கள்.

**திருவிருந்து** ஐக்கியத்தை வாரத்தின் **எந்த நாளிலும்** வைத்துக்கொள்ளலாம். அரபு தேசங்களில் **வெள்ளிக்கிழமைதான்** பொது விடுமுறை. ஆகவே அங்கு வேலைக்கு சென்ற இந்திய கிறிஸ்தவர்கள் அந்தந்த நாட்டில் ஒதுக்குபுறமான இடத்தில் பல கட்டிடங்கள் அரசாங்கமே கட்டி கொடுத்து ஒரு கட்டிடத்தில் 15 சபைகள் ஆராதிக்கிறார்கள். **விடியற்காலம்** தொடங்கி இரவு 9 மணி வரை ஒரு சபைக்கு 1½ மணிநேரம் வீதம் **ஒரே கட்டடத்தில்** 15 விதமான சபைகள் ஆராதிக்கிறார்கள். அப்படி பல கட்டிடங்கள் உண்டு. ஆகவே வேத வசனப்படி எந்த நாளிலும் நாம் கூடி திருவிருந்து ஆராதனை நடத்தலாம்.

**தவறாய் தகுதியில்லாமல்**
**திருவிருந்து கைக்கொண்டால் வரும் ஆபத்து**

இந்த **ஆபத்தை** குறித்து **இயேசு கூறவில்லை.** ஆனால் தாம் தெரிந்துகொண்ட அப்போஸ்தலனாகி **பவுல்** மூலமாய் அதை அறிவிக்கிறார். வசனத்தை கவணியுங்கள் 1 கொரி 11:30 அபாத்திரமாய் இந்த திருவிருந்தை கைக்கொண்டால்

**1 ) பலவீனம் 2) வியாதி 3) மரணம்**

மேலே குறிப்பிட்ட தண்டனை சம்பவிக்கும். இதில் **முதல் இரண்டும்** எச்சரிக்கையாகும். **பாவம்** செய்துகொண்டே திருவிருந்து கைக்கொண்டால். **மதுபானம்** குடிப்பவர்கள், **விபச்சாரம்** செய்பவர்கள். **பொய்** சொல்லி மக்களை ஏமாற்றுபவர்கள். இந்த பொய் சொல்லுபவர்கள் விசுவாசிகள் மட்டுமல்ல. இந்த திருவிருந்தை நடத்தும் ஆயர், சபையின் **பாஸ்டர்,** கன்வென்ஷன் செய்தியாளர் **அன்னிய பாஷையில்** ஜெபியுங்கள் என்று **தானும் கெட்டு -** மக்களையும் **தவறான உபதேசத்தை** பின்பற்ற வைக்கும் பொய் ஊழியர்கள், பொய் **தீர்க்கதரிசனங்களை** கூறும் **TV ஊழியர்கள்.** இப்படி **பொய்** சொல்பவர்கள் யாராக இருந்தாலும் **திருவிருந்தை** கைக்கொண்டால் காரணமில்லாமல் **பலவீனம்** உண்டாகும். டாக்டர்களே காரணம் கண்டுபிடிக்க முடியாத **வியாதிகள்** வந்து கொண்டேயிருக்கும். இப்படிப்பட்ட **பலவீனம் வியாதிக்கு** காரணம் **திருவிருந்தை** தகுதியில்லாமல், **பாவம் மன்னிக்கப்படாமல்** கைகொள்வதனால் உண்டாகும் **ஆபத்துகளாகும்.**

அடுத்தது **திருவிருந்தை** தகுதியில்லாமல் கைக்கொள்வதினால் ஏற்படுவது **மரணம் ஆகும். திருவிருந்தின் விளைவு** எவ்வளவு பயங்கரம் பார்த்தீர்களா? **முதல் இரண்டும்** எச்சரிப்புகளாகும். எச்சரிப்பை **அலட்சியம்** செய்துவிட்டு **திரும்ப திரும்ப** பாவம் செய்வார்களேயானால் திரும்ப திரும்ப **மதுபானம் குடித்து,** விபச்சாரம் செய்து **பொய்** பேசி

கொண்டேயிருப்பார்களேயானால் 3வது **எச்சரிப்பு அல்ல. முடிவு.** அது **மரணமாகும்**. ஆம் திருவிருந்தே **ஒருவனை கொல்கிறது** என்பதை கவனிக்கும்போது திருவிருந்தை எத்தனை **பயபக்கியோடு** பங்குகொள்ள வேண்டும் என்பது விளங்ககிறதல்லவா ! ஆகவே திருவிருந்தில் விளையாடாதீர்கள். தகுதியில்லாமல் கைக்கொள்ளாதீர்கள்.

நிறைய கிறிஸ்தவ விசுவாசிகள் **திருவிருந்து பாவத்தைக் கழுவும்** என்று நினைக்கிறார்கள். பாவத்தை கழுவாது. இயேசுவின் இரத்தத்தால் பாவம் கழுவப்பட்டவர்கள் சேர்ந்து கைகொள்ள வேண்டியதுதான் திருவிருந்து ஆகும்.

அதனால்தான் **திருவிருந்து ஆராதனையில்** 1 கொரி 11:27-31 வசனம் வரை **வாசித்து** அதன் **இரண்டு எச்சரிப்புகளையும்** அறிவித்து பின் **அதன் முடிவையும்** கூறிவிட்டு திருவிருந்து கைக்கொள்ள விசுவாசிகளை அழைப்பார்கள். இதை ஒவ்வொரு திருவிருந்து ஆரதனையிலும் அந்த பகுதியை வாசித்து ஞாபகப்படுத்துவார்கள். காரணம், **இரட்சிக்கப்பட்ட விசுவாசிகளேயானாலும்** அவர்களும் மனிதர்களே. ஆகவே இரட்சிக்கப்பட்டு மறுபடியும் பாவத்தில்விழ, தவறு செய்ய ஏது உண்டு. ஆகவே மறுபடியும் பாவம் செய்தால் அவர்கள் கர்த்தரிடம் மறுபடியும் அறிக்கை செய்து **பாவ மன்னிப்பு பெற்று** வசுவாசிகளின் ஐக்கியத்தில் இணைந்து **திருவிருந்தை கைக்கொள்ளலாம்.**

ஒருவேளை ஒரு விசுவாசி **மறுபடியும் பாவத்தில் விழுந்து** மறுபடியும் **குடிகாரனாகவோ, இரண்டு மனைவிகளின்** தொடர்பை நிறுத்தாமல் இரண்டு மனைவியுடன் வாழ்பவனாகவோ இருக்குறான் என்பதை **பாஸ்டரும்,** சபை ஜனங்களுக்கும் **பகிரங்கமாக அறிந்திருந்தாலும் ஆயரும் அதை அறிந்தாலு**ம் அந்த நபர் திருவிருந்து பந்தியில் பங்குகொள்ள வந்துவிட்டால், **பாஸ்டரோ, ஆயரோ** சபை **மூப்பரோ** அவரை தடுக்கக்கூடாது. **அப்பம் திராட்சை ரசமும்** அவருக்கு கொடுக்கலாம். காரணம், ஆராதனைக்கு முன் **எச்சரிப்பை வாசித்து** அறிவித்தாகிவிட்டது. அவன் அதை கேட்டான் என்றாலும் **துணிகரமாக** திருவிருந்தில் பங்குகொள்ள அவன் வந்து விட்டால் **அதன் தண்டனையை** அவன்தான் அனுபவிக்க போகிறான். அந்த அடிப்படையில் அவனை திருவிருந்தில் அனுமதிக்கலாம். இப்படி பாவம் செய்துகொணடே மனைவி உயிரோடு இருக்க வேறு மனைவியோடு வாழ்ந்துகொண்டே திருவிருந்தை கைக்கொள்பவரை நான் பல ஊர்களில், பல நாடுகளில் கண்டிக்கிறேன். மேலும் பாஸ்டர், நிர்வாகிகள் அப்படிப்பட்ட நபருக்கு **சபையிலும்** உயர்ந்த **பதவியை** அளித்து அவனை **சபை ஆயர்** கவுரவிப்பதையும் கண்டிக்கிறேன். ஆனால் அந்த நபருக்கு உண்டான விளைவு மிகவும் **கோரமாயிருந்த**து. குடும்பம், பிள்ளைகள் யாவரும் அவன் நிமித்தம் **ஆசீர்வாத்தை** இழந்தது. கஷ்டப்படுவதையும் நேரில் பார்க்கிறேன். ½

### ஒப்புரவாதல்

மேலும் சிலர் **விபச்சாரம், வேசித்தனம். பொய்** இவைகள் மட்டுமே **பாவம்** என்று நினைக்கிறார்கள். **ஒப்புரவாகாததும்** பாவமே! சிலருடன் 10 வருடமாக நான் பேசுவது கிடையாது என்று பெருமையுடன் பேசுவது, அவர்களை பகைப்பது, இதை **கவுரவமாக பெருமையாக** கருதி வெளிப்படையாக கூறவும் செய்வார்கள். ஆனால், **அது பாவம்** என்று அறியார்கள். அறியார்கள் என்பதைவிட அதை பாவம் என்று ஏற்றுக் கொள்ளமாட்டார்கள்.

நம் ஆண்டவரிடம் **கண்டிஷன்** இல்லாத **ஆசீர்வாதமே** கிடையாது. **காணிக்கை** போடும் போது காணிக்கை பெட்டியினடியில் நின்று உன் சகோதரனிடம் ஏதாவது பினக்கம் இருந்தால் காணிக்கையை பெட்டியில் போடாமல் **காணிக்கை பெட்டியினடியில் வைத்துவிட்டு** முந்தி போய் அந்த சகோதரனிடம் **ஒப்புரவாகிவிட்டு** பின்பு வந்து உன் காணிக்கையை **பெட்டியிலேபோடு** என்று இயேசு சொன்னாரே ! அதிலிருந்து நாம் அறிய வேண்டியதுஎன்ன? **ஒப்புரவு** ஆகாதவனுடைய காணிக்கைகூட கர்த்தர் **அங்கீகரிப்பதில்லை** என்று தெரிகிறது. அப்படியே **ஜெபம்** செய்யும் போதும் முந்தி **அவனிடம் ஒப்புரவாகி** பிறகு ஜெபி அப்போதுதான் அந்த ஜெபத்தை கேட்பேன் என்று இயேசு கூறினார்.

பிரச்சனையை கவனித்தீர்களா? **காணிக்கை** கர்த்தருக்கு செலுத்த வேண்டுமானால் **ஒப்புரவாக வேண்டும்.** ஜெபம் கேட்கப்பட வேண்டுமானாலும் **ஒப்புரவு** ஆகவேண்டும். அப்படியே **வியாதி** சுகமாக வேண்டுமானாலும் **ஒப்புரவாக** வேண்டும். யாக் 5:14-16 வாசித்துப் பாருங்கள்.

ஏன் இயேசு இப்படிப்பட்ட கடுமையான சட்டம் இட்டிருக்கிறார் என்றால் **நான் உங்கள் பாவத்தை மன்னித்ததைபோல** நீங்களும் ஒருவரை ஒருவர் பாவத்தை **மன்னியுங்கள்** என்றார். எத்தனையோ முறை இயேசு நம்முடைய பாவத்தை மன்னித்து இருக்கிறாரே ! அப்படியிருக்க **நாமும்** மற்றவர்களின் குற்றத்தை **மன்னிக்கவேண்டும்** என்று கர்த்தர் எதிர்பார்க்கிறார்.

ஆகவே நாம் மற்றவர்களிடம் **ஒப்புரவாகாதிருந்தால் பகையை** மனதில் வைத்துக்கொண்டு **வெறுப்புணர்ச்சியுடனிருந்தால்** திருவிருந்தில் **கை வைக்கக்கூடாது** ஜாக்கிறதை !

திருவிருந்து நாம் தேவனோடு செய்யும் **உடன்படிக்கையாகும்.** இயேசுவின் பாடு - மரணத்தை இதன் மூலம் சபைமக்களோடு சேர்ந்து **நினைவு கூர்ந்து** கர்த்தரை துதிக்கிறோம். அதானால்தான் இயேசுவும் சீஷர்களும் திருவிருந்து கைக்கொண்ட உடன் **ஸ்தோத்திர பாட்டை பாடினார்கள்** என்று வேதத்தில் எழுதியிருக்கிறது. ஆகவே அன்பானவர்களே நாம் பெயர் கிறிஸ்தவர்களாக இராமல் வசனத்தின்படி வாழும் கிறிஸ்தவர்களாக சாட்சியுடன் வாழ்வோம்.

நான் எழுதிய இந்த ஆலோசனை திருவிருந்தை கைக்கொள்ளும் அனைத்து சபைகளுக்கும் பொறுந்தும். கர்த்தருக்கே மகிமை உண்டாவதாக.


## ONLINE BANKING (NEFT)

**Name : M G E PUSHPARAJ**

**STATE BANK OF INDIA**

IFSC CODE - IFSC SBIN0001970 -10764116842 **A/C No: 10764116842**

SWIFT CODE - SBININBB300 **A/C No: 10764116842**

**CANARA BANK - SALEM** (SURAMANGALAM BRANCH)

IFSC CODE - IFSC CNRB0001219- 1219101013622. **A/C No: 1219101013622.**

SWIFT CODE - CNRB0001219 -1219101013622. **A/C No: 1219101013622.**

# தமிழ் தாவீது என்ற V.D. டேவிட்

SELECTED

(கடவுளுக்குத் தங்களை முற்றிலும் ஒப்புக்கொடுத்து தேவ சித்தத்தைச் செய்ய பேராவல் கொண்டவர்களைக் கொண்டு கர்த்தர் என்னவெல்லாம் செய்யக்கூடும் என்பதை இந்த உலகம் காணக் காத்துக்கிடக்கிறது)



வெகு காலத்துக்குமுன்பு இந்தியாவில் தமிழ்நாட்டில் **பாளையம் கோட்டையில்** தங்கும் விடுதியோடு கூடிய **CMC மிஷன் பள்ளி** ஒன்றில் **தாவீது** என்ற ஒரு சிறுவன் சேர்க்கப்பட்டான். அவன் சோம்பலும் சுட்டித்தனம் சேர்ந்த ஒரு கலவை, தன் பள்ளிப்படிப்பை முடித்ததும **இலங்கைக்கு** போய் பிழைத்துக்கொள்ளலாம் என்பது அவனது கனவு. அதன் படியே படித்து முடித்து **இலங்கைக்குச்** சென்றான். வேறு தொழில் ஒன்றும் தனக்குத் தெரியாது என்று **மதுக்கடை** ஒன்றை துவங்கினான்.

அந்நாட்களில் (தூத்துக்குடி) **மெஞ்ஞானபுரம்** என்ற ஊரை மையமாக்கி அதைச் சுற்றியிருந்த 12 போதகாதீனங்களை **ஜான் தாமஸ்** என்ற **மிஷனரி** மேற்பார்வை செய்து வந்தார். அவரது துணைவியாரின் **கண்காணிப்பில்** ஏழை பெண் பிள்ளைகள் வளர்க்கப்பட்டார்கள். அவர்களில் **மேரி** என்ற பெண்ணுக்கு **தாவீதுக்கும்** சம்பந்தம் பேசி **திருமணம்** முடித்து வைக்கப்பட்டது. இரட்சக்கப்பட்ட அனபவம் உள்ள **மேரியை** மனைவியாக பெற்றது தாவிதுக்கு கிடைத்த ஒப்பற்ற பாக்கியம்.

திருமணம் முடிந்து சில மணி நேரத்துக்குள்ளாகவே தன் கணவன் தாவீது **பெயரளவில் மட்டுமே கிறிஸ்தவன்** என்பதை அறிந்து கொண்ட மேரி, **சுவிசேஷப் கைபிரதி** ஒன்றை கொடுத்து வாசிக்கும்படி கணவன் டேவிட்டை கேட்டுக்கொணடாள். ஆனால் துண்டு தன்னிடம் கொடுத்தது தன் மனைவி **தன்னை மட்டம் தட்டுவதைபோல** இருந்தது. மேலும் தாவீதுக்கோ அது பெரும் **மரியாதைக் குறைவான செயலாககத்** தெரிந்தது. அது மட்டுமல்ல ஒவ்வொரு நாளும் **காலை எழுந்ததும்** அவள் **வேதமும்** கையுமாகவே தன் முன் நிற்கிறாள். இதுவும் தாவீதுக்கு **கொஞ்சமும் பிடிக்கவில்லை.**

திருமணம் முடிந்து **இலங்கை** திரும்பிய தாவீது தனது **இரண்டாவது மதுக்கடையை** திறந்தான் என்றாலும் அவன் உள்ளத்திலோ குழப்பமும் அமைதியின்மையும்

வலுத்துக்கொண்டிருந்தது. அப்போதுதான் வேறு வழியின்றி **முதன்முதலாக** வேதாமத்தைக் கையிலே எடுத்து அதைப் படிக்கத் துவங்கினான்.

**மீட்பு** என்பது மனிதனின் **புண்ணியக் கிரியைகளினால்** கிடைக்கக் கூடியது அல்ல. அது கடவுளின் அற்புதமான **கிருபை** வரம் என்பதை **ரோமர்** நிரூபத்திலிருந்து சீக்கிரமே தாவீது அறிந்து கொண்டான். கடவுளின் அந்த **ஈவை** விசுவாசத்துடன் **மனதார அவன் ஏற்றுக்கொண்டபோது** தாவீன்தின் வாழ்கையிலே **ஒரு திருப்பம்** ஏற்பட்டது. **மேரிக்கும்** அது மிகுந்த மகிழ்ச்சியைத் தந்தது. இப்போது **தாவீதின் வாழ்க்கை அடியோடு மாறிவிட்டது.** உடனே மற்றவர்களை சீரழிக்கும் தன் இரண்டு **மதுக்கடைகளையும்** மூடிவிட்டான். உடனேதாவீது இலங்கை **CMC நிறுவனத்தின் பள்ளி** ஒன்றில் **ஆசிரியராகச்** சேர்ந்தார். அதற்குள் 8 ஆண்டுகள் எப்படியோ ஓடிவிட்டது.

ஒரு நாள் இரட்சண்ய சேனையைச் சேர்ந்த (Salvation Army Church) கேப்டன் (ஊழியர்) ஒருவர் மூலம் **கடவுளுக்கு முற்றிலும் ஒப்புக்கொடுத்தல் என்றால் என்ன** என்பதை அறிந்து கொண்டார். அதன் மூலம் **தேவ ஆவியின் பூரண ஆட்கொள்ளுதலை** அவர் அனுபவித்தார்.

அதைப்பற்றி தாவீது **"ஆவியின் அருட்பொழிவு"** எனற் தன் புத்தகத்தில் எழுதும் போது…

அன்று இரவே சுமார் 11 மணியளவில் என் வீட்டின் மேல் அறையில் **என்னைத் தாழ்த்தி** தேவ சன்னதியில் என் மனதை ஒருமுகப்படுத்தி **ஜெபத்தில்** செலவிட்டேன். அப்போது என்னை சமூலமாய் என் ஆண்டவருக்கு அர்ப்பணித்தேன். **என் எல்லாவற்றயையும்** அவருக்கு முற்றிலுமாக கையளித்தேன். **என்னையும்,** என் **செல்வத்தையும்,** என் **முழுக் குடும்பத்தையும்,** என் **வேலையையும்** என ஒவ்வொன்றாய் **என் எல்லாவற்றையும்** பிதாவண்டையில் **ஒப்புவித்து** இனி **அவர் பிரியம். செய்வதே** இப்பூமியில் எனது பேராவல் என்று கூறி என்னை அவர் பாதபீடத்தில் ஊற்றி விட்டேன். இயேசுவே இனி **நான் உம்முடையவன்** நீர் என்னுடையவர் என்ற **விசுவாச அறிக்கையோடு** ஜெபத்தை முடித்துக்கொண்டேன்.

இப்படி ஜெபித்துவிட்டு **நடு இரவில்** இரண்டு மணியளவில் நான் எழுந்தபோது. புதிதாக எனக்குள் ஒன்றும் நிகழவில்லை. ஒன்று மட்டும் என் நெஞ்சில் உறுதியோடு வெளிப்பட்டது. **இனி நான் எனக்கு சொந்தமல்ல** என்ற தீர்மானமே அது.

இப்படி நான் என்னையே கர்த்தருக்கென்று மனப்பூர்வமாக ஒப்புக்கொடுத்துவிட்டதை கர்த்தரிடம் தான் செய்துகொண்ட ஒப்படைப்பை என் மனைவியிடம் நான் சொன்னபோது **அவள் அடைந்த ஆனந்தத்துக்கு** அளவே இல்லை.

மறுநாள் ஞாயிற்றுக்கிழமை. அன்று சீக்கிரமாகவே நான் எழுந்துவிட்டேன். என்னை ஆயத்தம் செய்துகொண்டு தேவாலயத்துக்குச்சென்றேன். செல்லும் வழியில் நான் செய்துகொண்ட **முழு அர்ப்பணத்தை** குறித்து கூட வந்த ஒரு பிரசங்கியாரிடம் பகிர்ந்து கொண்டேன். அதை தேவனின் தூண்டுதலின் பேரில் நான் அவரிடம் சொல்லும்போதே **தேவ ஆவியினால் நான் நிறைந்திருப்பதை** என்னால் உணர முடிந்தது.

**அன்று முதல்** என் ஊழியத்தில் **பெரும் மாற்றம்** காணப்பட்டது. நான் எங்கெல்லாம் சுவஷேசம் அறிவத்தேனோ அங்கெல்லாம் தேவனாலும், வசனத்தாலம் தொடப்பட்ட மக்கள் **கண்ணீரோடு மனந்திரும்பினார்கள்.** திரளான ஆத்துமாக்களை கொள்ளைப் பொருளாக தேவன் எனக்கு தந்தார். நான் ஆனந்தத்தால் நிறைந்தவனாக என் வீட்டிற்றிக்கு திரும்பினேன் என்று குறிப்பிட்டுள்ளார்.

அதன்பின் 1890ல் **ஜார்ஜ் கிரப்** என்ற ஊழியர் **இலங்கையில்** ஆவிக்குரிய கூட்டங்கள் நடத்தி வந்தார். அவருக்கு மொழிப்பெயர்ப்பாளராக **தாவீது** சென்றார். அப்போது **தாவீதின் ஊழியத்தில்** ஆவியானவரின் **அசாதாரணமான அசைவு** வெளிப்படவே **கிரப்** அவர்கள் **தாவீதை** தன்னுடன் **அஸ்திரேலியா, இங்கிலாந்து** ஆகிய நாடுகளுக்கும் வரும்படி அழைத்தார்.

**தாவீது** நல்ல உயரமும், வலுவான உருவமும் **கணிரென தெறிக்கும்** குரலும் உடையவர். அவரது (Dramatic Preaching) **அபிநயத்தோடு பேசும்** வசீகரத் தோற்றம், சிறித்த முகமும், **புன்னகை ததும்பும்** கனிவான தோற்றமும் நம்பிக்கை உண்டாக்கும் **காந்தக் கண்கள்** மூலம் **கிறிஸ்துவின் சாயல்** தேவ மாட்சியோடு தத்ருபமாக **தாவீதில்** வெளிப்பட்டது.

**தமிழிலும், ஆங்கிலத்திலும்** நேர்த்தியாக செய்தி கொடுக்கும் **கிருபையை** அவர் பெற்றிருந்த காரணத்தால், **தாவீது** உலகின் **பல நாடுகளிலும்** செய்தி கொடுக்கும்படி அழைக்கப்பட்டார். கடவுள் **ஒரு மனிதனை தொட்டால்** அவர் அவன் மூலம் எத்தனை **ஆயிரங்களைத் தொட முடியும்** என்பதற்கு **தாவீது ஓர் அற்புதச் சான்று.**

**இங்கிலாந்தில்** ஆண்டு தோறும் நடைபெற்று வரும் மிகவும பிரசத்திபெற்ற **கெஸ்விக் கன்வென்ஷன்** (Keswick) **கூட்டங்களில்** செய்தி அளிக்கும்படிக்கும் தாவீது கேட்டுக் கொள்ளப்பட்டார். தேவ கிருபையால் **கெஸ்விக்கில்** பேசிய முதல் **இந்திய ஊழியர்** என்ற பெயரும் அவருக்கு கிடைத்தது. இது எல்லாருக்கும் எளிதில் கிடைக்கக்கூடிய வாய்ப்பு அல்ல.

**உலக பிரசித்தி பெற்ற** வேதபண்டிதர்கள் மட்டுமே அக்கூட்டங்களுககு செய்தியாளராக அழைக்கப்படுவார்கள். அன்று முதல் **தமிழ் தாவீது** என்று பிரியமுடன் அனைவராலும் அழைக்கப்பட்டார். உலக நாடுகளிலும் **தமிழ் தாவீது** என்ற பெயரில்தான் அழைக்கப்பட்டார்.

பின் **"ஆவியின் அருட்பொழிவு"** என்ற ஒரு புத்தகத்தையும் வெளியிட்டார். **ஆப்பிரிக்காவில் உகான்டாவில்** மிஷனரியாகப் பணியாற்றிய **G.L பில்கிங்டன்** (G.L.Bilkington) அந்த புத்தகத்தை பெற்று வாசித்தபோது **அவருக்குள்ளும்** அதே பூ**ரண அர்ப்பணம் அனுபவம் (GL பில் கிங்டன்** வாழ்க்கையிலும்) நிகழ்ந்தது, **தமிழ் தாவீது** அனுபவித்த அதே அபிஷேகம் **பில்கிங்டன்** மூலம் ஆப்பிரக்காவில் **உகாண்டா ந**ாட்டையும் அசைக்க அடிகோலியது.

இது நடந்தது 1893 டிசம்பல் 7ம் தேதி ஆகும். அன்று **பில்கிங்டன்** முற்றிலுமாக **தேவனுக்கு தன்னை** அர்ப்பணித்து தேவனுக்கு நன்றி சொல்லிவிட்டு விசுவாசத்தோடு ஜெபத்திலிருந்து எழுந்தபோது **பில்கிங்டனின்** முகத்திலும் ஒரு புதுப்பொலிவும் தேவனின் திருமுக சாயல் பிரகாசமாக வெளிப்பட்டது. இந்த அற்புத மாற்றம் **பில்கிங்டன்** ஊழியம் செய்த ஆப்பிரிக்காவிலுள்ள **கோம்** (Kome) நகரம் முதல் **மேன்கோ** (Mengo) என்ற ஊர் வரை வாழ்ந்த, **பங்கண்டா** (Banganda) என்ற இன மக்கள் அவரைப்பற்றி அளித்த சாட்சி ஆகும்.

பிலகிங்டன் அவர்களன் மஷனரி ஊழியத்தில் **விசித்திர மாற்றம்** நிகழ்ந்தது. திரளானோர் தேவ அன்புக்கு அடிமையானார்கள். அம்மக்கள் **அடியோடு மாற்றப்பட்டார்கள்.** தேவகரம் அற்புதமாய் அவர் மூலம் வெளிப்பட்டது. கடவுளின் **வார்த்தை** மின்னலாய் மணங்களை ஊடுருவியது.

ஆரம்பத்தில் 1.375 **கிறிஸ்தவர்களை** மட்டுமே கொண்டிருந்த அவரது **மிஷனரி ஸ்தாபனம்** 1897ல் 12,086 பேராக **வளர்ச்சி கண்டது.** அதே ஆண்டுதான் **பில்கிங்டனும்** சூடானியப் **புரட்சி போரில்** சம்பந்தமே இல்லாது அநியாயமாய் கொல்லப்பட்டார். அவர் அனுபவித்த **பரிசுத்த ஆவியின் நிறைவு** அந்த **வீர மரணத்தை** எதிர்கொள்ளவும் அவரை **பக்குவப்படுத்தியிருந்தது.** அவரது மரணத்தை தொடர்ந்து 5 ஆண்டுகளில் அந்த மிஷனரிக்களத்தில் 38,844 பேர் **மனந்திரும்பிய மைந்தர்களாக** கிறிஸ்துவில் வளர்ந்து **விசுவாசத்தில்** முதிர்ச்சி பெற்றிருந்தார்கள்.

**தமிழ் தாவீது** என்ற ஒரு சாராதண மனிதனின் **பூரண அர்ப்பணம்** சங்கிலித் தொடராய் **எத்தனை** நாடுகளிலும், காடுகளிலும் வாழ்ந்த **ஜனங்களை** கொள்ளைக்கொண்டது என்பதைப் பாருங்கள்.

**தமிழ் தாவீதின்** மூலம் இயேசுவை கண்டவர்களில் பலர் அதில் ஒருவர்தான் **கடம்பா வனம்** என்பவராகும். பிற்காலத்தில் அவர் **பால் கடம்பாவனம்** என்று அழைக்கபபட்டார். **தமிழ் திருச்சபைகளி**ல் தேவனால் பெரிதும் உபயோகிக்கப்பட்டவர் இவர். **சென்னை** பார்க் டவுன் **சத்தியநாதன் மெமோரியல் ஹாலில்** (நினைவு மண்டபத்தில்) 1908ல் நடைபெற்ற நற்செய்தி கூட்டங்களில்தான் **கடம்பவனம்** தொடப்பட்டார். இப்படி எத்தனையோ பேர் **தாவீதின் ஊழியத்தால்** தொடப்பட்டார்கள்.

☐ **கேரளாவில்** பம்பா ஆற்றுப் படுகையில் பிரமாண்டமாக ஆண்டுதோறும் நடத்தப்படும் கேரளாவில் புகழ்பெற்ற **மாராமன் கூட்டங்களிலும்** அவர் கர்த்தராலே் வல்லமையாக பயன்படுத்தப்பட்டார். அம்மாநிலத்திலும் எழுப்புதல் தீ தேவனால் அவரைக்கொண்டு பற்றவைக்கப்பட்டது. திரளான மக்கள் கண்ணீரோடு **தேவனோடும் மனிதரோடும்** மனம் பொருத்தினார்கள்.

இதைக் கேள்விப்பட்ட **ஸ்டேன்ஸ்** (WH Stanes) என்பவர் **அமெரிக்காவுக்கு தமிழ்தாவீதை** தன்னோடு அழைத்துச்சென்றார். அங்கு தேவனால் வழிநடத்தப்பட்ட **தமிழ் தாவீது** புகழ்பெற்ற **DL மூடி பிரசங்கியார் அவர்களால்** (DL Moody) ஆண்டு தோறும் நடத்திவந்த **நார்த் ஃபீல்டு** கோடை கால **ஆவிக்குறிய மாநாட்டிலும்** பேசும்படி **DL மூடியால்** அழைத்து கௌரவிக்கபட்டார்.

இப்படி எழுப்புதல் நெருப்பை உலகெங்கும் கொண்டு சென்ற **தமிழ் தாவீது** தன் **ஓட்டத்தை** முடித்து நவம்பர் 30,1923ல் தனது 72வது வயதில் **பெங்களூரில்** கர்த்தருக்குள் நித்திரை அடைந்தார். அவரது கல்லறையில் **இயேசு என்னை நேசித்தார் எனக்காக தம் ஜீவன் தந்தார்** என்ற அற்புத வாசகமே பொறிக்கபட்டுள்ளது. **தமிழ் தாவீதை** அசைத்த **தேவன்** இப்போதுள்ள **தமிழ்ச்சபை** ஊழியர்களை **சபை மக்களையும்** அசைப்பாராக! **தமிழ் தாவீதைக்கொண்டு** உலக நாடுகள் பலவற்றையும் அசைத்த நம் தெய்வம் இதை வாசிக்கும் **நம்மைக்கொண்டும்** தமிழ் டேவிட்டை போல் உபயோகித்து பல்லாயிரங்களை அசைப்பாராக!

## ஜாமக்காரன் பத்திரிகையும் வாசகர்களும்...

**ஜாமக்காரன்** பத்திரிகை உங்கள் ஆத்துமாவுக்கு **குழப்பத்தை** உண்டாக்குமானால், ஆத்தும வளர்ச்சிக்கு **பிரயோஜனமில்லாமல்** இருக்குமானால் **ஜாமக்காரனை கவரோடு** பத்திரிகையும் வைத்து கவரில் அச்சடிக்கப்பட்ட என் **விலாசத்துக்கு** நேராக ஒரு அம்புகுறி கோடு போட்டு **தபால் பெட்டியில்** ஸ்டாம்ப் ஒட்டாமல் போட்டுவிடுங்கள்

அப்படியே உங்கள் **விலாசம் மாறியிருந்தால்** புதிய விலாசத்தையும், பழைய விலாசத்தையும் குறிப்பிட்டு **ஒரு லட்டர் அ**ல்லது Emailல் அறிவித்தால் அதை கம்ப்யூட்டரில் சேர்க்க உதவியாக இருக்கும்

## கன்வென்ஷன்

இப்போது மூன்றாவது கொரோனா அலையும் நான்காவது அலையும் வேகமாக பரவுவதால் யாருக்கும் கனவென்ஷனுக்கு தேதி கொடுக்கவில்லை. அந்த **அலையின் வேகம்** குறைந்தால் கர்த்தர் **என் ஆயுசையும்** நீட்டி தந்தால் நிச்சயம் **இந்தியா** முழுமைக்கும் **சபைகளுக்கு** முன்புபோல் தேதிகள் ஒதுக்குவேன். **லெந்து காலங்களில்** தயவுசெய்து யாரும் தேதி கேட்டு எனக்கு எழுத வேண்டாம். அந்த குறிப்பிட்டு நாட்களில் **எல்லா சபைகளிலும்** கன்வென்ஷன் நடத்துவார்கள். அதனால் **அனைத்து சபை மக்களும்** என் கூட்டத்தில் **ஒன்று கூடுவது** இயலாது போகும். **லெந்து நாட்களில்** நடத்தும் கூட்டங்களை நான் **தவிர்ப்பதற்கு** இதுதான் காரணம்.

# கேள்வி? பதில்!

**கேள்வி :** நீங்கள் பிரசங்கம் கேட்கும்படி சிபாரிசு செய்த **ஆவடி** ACA சபை **பாஸ்டர் காப்ரியேல்** அவர்கள் ஆவடி ACA சபையின் **கர்த்தருடைய மேசையில்** பங்குகொள்ள வேண்டுமானால் **ஏதாவது ஒரு பெந்தேகோஸ்தே** சபையில் **ஞானஸ்நானம்** எடுத்திருந்தால் மட்டுமே ஆவடி ACA சபை நடத்தும் **கர்த்தருடைய மேசையில் (திருவிருந்தில்)** பங்குகொள்ளலாம் என்று ஒவ்வொரு திருவிருந்து ஆராதனையிலும் அறிவிப்பு கொடுக்கிறார். நான் LEF (ஜோ. டானியேல்) **லே மேன் இவான்ஜிலிக்கல்** சபையில் **தண்ணீரில் முழுகி ஞானஸ்நானம்** எடுத்தவன் கடந்த 9 மாதங்களாக **ஆவடி** ACA சபைக்கு **நேரிலும்** Onlineனிலும் ஆராதனையில் கலந்துகொண்டு சுமார் 5 முறை **கர்த்தருடைய மேசையில்** பங்குகொண்டிருக்கிறேன். அவர் அறிவித்தபடி **பெந்தேகோஸ்தே** சபையில் நான் ஞானஸ்நானம் எடுக்கவில்லை. அந்த விவரத்தை சபையில் யாரிடமும் கூறவில்லை. அவர்கள் கொடுத்த **சபை அங்கத்தினர்** கார்ட்டையும் பூர்த்தி செய்யாமல் வைத்திருக்கிறேன். **ஆவடி** ACA சபை **கர்த்தருடைய மேசையில்** பங்குகொள்ளும் போதெல்லாம் என் உள்ளத்தில் குற்ற உணர்ச்சி **எனக்கு உண்டாகிறது.** அதனால் பல சமயம் பிரசங்கம் முடிவு ஜெபம் முடிந்தவுடன் நானும் என் மனைவியும் ஆராதனையில் இருந்து எழுந்து வந்துவிடுகிறோம். மனதில் குழப்பம் உண்டாகிறது. எப்படியோ **நல்ல செய்தி** கேட்டோம் என்ற திருப்தி மட்டும் உள்ளத்தில் உண்டாகிறது.

நாங்கள் கடந்த 25 வருடமாக **ஜாமக்காரன்** வாசகர்களாக உங்கள் பத்திரிகை பெற்று வருகிறோம். எங்களுக்கு பதில் தரும்படி கேட்டுக்கொள்கிறோம்.

**பதில் :** அன்பானவர்களே ! உங்கள் கேள்வியை சுருக்க முடியவில்லை. ஆகவே நீங்கள் எழுதியதை அப்படியே வெளியிடுகிறேன். **ஆவடி** ACA சபையிலும், **கிளை** சபையிலும் **ஜாமக்காரன்** வாங்குபவர்கள் சுமார் 17 குடும்பங்கள் உண்டு. அவர்களின் பெரும்பாலானோர் CSI **சபையிலிருந்து** வெளியேறி சுமார் 24 வருடங்களாக **ஆவடி ACA** சபை அங்கத்தினர்களாக

சபைக்கு போய் வருகிறார்கள். இனி அவர்கள் யாவரும் ஜாமக்காரனின் **ஸ்லீப்பர் செல்லாக** ACA பாஸ்டரால் கருதப்படுவார்கள். அவர்கள் யாரும் உங்களைப் போல் ஆவடி ACA **சபை** குறித்து இந்த குற்றச்சாட்டை கூறியது இல்லை. ஒருவேளை அவர்கள் யாவரும் சென்னையில் எந்த **பெந்தேகோஸ்தே** சபையிலாவது **ஞானஸ்நானம்** எடுத்திருப்பார்களோ! என்னவோ! எனக்கு தெரியாது.

**பாஸ்டர் காப்ரியேல்** அவர்கள் தன் **பிரசங்கம்** வேறு, சபை **உபதேசம்** வேறு என்று இரண்டாக பிரித்திருக்கிறாரோ என்னவோ ! பாஸ்டருடைய தம்பி **ஜோயலும்** அப்படியே பிரசங்கம் வேறு, செயல் வேறு என்று கருதுகிறாரோ என்று நினைக்கிறேன். **பொய்யும்,** கள்ள **உபதேசமும்** நிறைந்த **ஏஞ்ஜல்** TV முதலாளி **சாது செல்வராஜ்** கட்ட இருக்கும் **பல கோடி** செலவுள்ள மிகப் **பெரிய கட்டிடத்துக்கு** பணம் அனுப்பி உதவும்படி **TV சேனலில்** பாஸ்டர் **ஜோயல்** நேரில் தோன்றி அந்த **பொய் தீர்க்கதரிசிக்கு பணம்** சேகரித்து உதவுகிறார். ஒரு தவறான **உபதேசத்துடன் இயங்கும்** சாது **செல்வராஜ்** அவர்களின் **இயேசு ஊழியங்களோடு** சமரசம் செய்துகொண்டு இயேசு ஊழியங்களில் சாது செல்வராஜ் கம்பெனியில் **ஒரு கால்,** ஆவடி ACA சபையில் **ஒரு கால்,** வைத்துக்கொண்டு ACA சபையில் பிரசங்கிக்கிறார். தன்னை பல ஆண்டுகள் தள்ளி வைத்த **ஆவடி ACA** சபையில் இப்போது **உதவி பாஸ்டராக** ஊழியம் செய்கிறார். தம்பி **ஜோயல்** பிரசங்கங்களை கேட்க நன்றாகத்தான் இருக்கிறது. ஆனால் அவரிடம் நிலையான ஆவிக்குறிய **கொள்கை இல்லையே!** பாட்டு பாட **ஜோயலை** யார் கூப்பிட்டாலும் **தன்னை விளம்பரப்படுத்த** விதவிதமான உடையில் TVயில் காட்சியளிக்கிறார். இவர்களின் ஆவிக்குரிய **நிலைபாடு** (Stand) என்ன ? ஆவடி **ACA சபை** மக்களுக்கு இப்படிப்பட்ட தங்கள் செயல்கள் மூலம் இவர்கள் என்ன அறிவிக்க விரும்புகிறார்கள் ? தெரியவில்லை !

இவர்களை **குற்றம்** சொல்லவில்லை, **குறைகளை** மட்டுமே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். **ஆவடி** ACA சபை **பாஸ்டர் காப்பிரியல்** அவர்கள் **பெந்தேகோஸ்தே சபையில் ஞானஸ்நானம்** எடுத்தவர்கள் மட்டுமே **கர்த்தருயை மேசையில்** (திருவிருந்து) பங்குகொள்ளலாம். மற்றவர்கள் அப்படியே அமர்ந்திருப்பதில் ஆட்சேபனையில்லை என்று அறிவிக்கிறார்.

இது **வேத வசனத்துக்கு விரோதமான** உபதேசமாகும். வேதத்தில் **பெந்தேகோஸ்தே சபை** என்ற பெயரில் ஒரு சபை கூட இல்லை. இது **இவருடைய சபைக்கென்று** இயற்றிய தனி சட்டமாகும். இவர்களின் சட்டப்படி பார்த்தால் **பாஸ்டர் காப்பிரியேல்** கையில் வைத்திருக்கும **வேத புத்தகத்தை** நமக்கு **தமிழில்** மொழிபெயர்த்து தந்த மிஷனரி **சீகன்ஸ்பால்** (தரங்கம்பாடி) அவர்களும் இந்திய முதல் மிஷனரி **வில்லியம்கேரி** அவர்களும் இவர்களுடைய ACA **சபைக்கு** வந்தால் **கர்த்தருடைய மேசையில்** நீங்கள் இருவரும் பங்குகொள்ள **தகுதியில்லை?** ஆகவே உங்களுக்கு **அப்பமும், திராட்சை ரசமும்** நீங்கள் எத்தனை முறை கை நீட்டினாலும் கொடுக்க மாட்டோம் என்பார்களோ! கற்பனை செய்து பாருங்கள். இதுதான் **கள்ள உபதேசம்,** அல்லது

**மாய்மால உபதேசம் ஆகும்.** கர்த்தருடைய செய்தியை இவர்கள் எத்தனை அருமையாக பகிர்ந்துகொண்டார்கள். நான் குறிப்பிட்ட இந்த **இரண்டு மிஷனரிகளும்** வேத வசனத்தின்படி **மனம் திரும்பி** ஞானஸ்நானம் எடுத்தவர்கள் அகும். ஆனால் **பெந்தேகோஸ்தே** சபையில் **ஞானஸ்நானம் எடுக்கவில்லை.**

மிஷனரி **ரிங்கல் தோபே** அவர்கள் மூலமாக இயேசுவை ஏற்றுக்கொண்டு **ஞானஸ்நானம்** எடுத்தவர்களுக்காக **கன்னியாகுமரி** மாவட்டத்தில் **மயிலாடி** என்ற ஊரில் அந்த மாவட்டத்தில் முதல் கிறிஸ்தவ சபையை கட்டினவர் ஆவார். அதே சபையில் மிஷனரி **ரிங்கல் தொபே** அவர்கள் பல நூறு ஆத்துமாக்களுக்கு **ஞானஸ்நானம்** கொடுத்தவர். இந்த மிஷனரிகளுக்கே **ஆவடி** ACA சபையில் **கர்த்தருடைய மேசை** மறுக்கப்படுகிறது என்றால் இந்த கேள்வி கேட்ட நீங்கள் ஏன் சோர்ந்து போகிறீர்கள்?. இப்படிப்பட்டவர்களின் கையில் **திருவிருந்து** எடுத்தால் என்ன? எடுக்காமல் போனால் என்ன ?

**பவுல்** கொரிந்து சபைக்கு **கர்த்தருடைய பந்தியை** குறித்து 1 கொரி 11:28ல் ஆலோசனை கூறும்போது **அவனவன் தன்னைத்தான் சோதித்து அறிந்து இதிலே பானம் பன்னக்கடவன்** என்றார்.

**கொரிந்து சபை, விசுவாசிகளின்** சபைதான் என்றாலும் **திருவிருந்து** சமயத்தில் சபை அங்கத்தினர் ஒவ்வொருவரும் தன்னை **சுயபரிசோதனை** செய்யாமல் **திருவிருந்தில்** கைக்கொள்வது **மகா ஆபத்தானது** என்று 30வது வசனத்தில் கூறுகிறார்.

ஆகவே திருவிருந்தில் பங்குகொள்ளும்போது திருவிருந்து பந்தியை **நடத்திக்கொடுப்பவர் யார்?** உங்கள் **பக்கத்தில்** பந்தியில் பங்கு கொள்ளும் **நபர் யார்** என்பதையெல்லாம் கவனிக்க சொல்லவில்லை. பங்குகொள்ளும் **நான்** வேத வசனத்தின்படி **பந்தியில் பங்குகொள்ள தகுதியுள்வனா?** என்றுதான் கவனிக்க சொல்கிறாரே தவிர, நீ **பெந்தேகோஸ்தே** சபையில் **ஞானஸ்நானம்** எடுத்தவரா? **சர்ச் ஆப் காட்** சபையில் அல்லது **தி பேப்டிஸ்ட்** சபையில் **ஞானஸ்நானம்** எடுத்தவரா? என்பதை பவுல் கவனிக்க சொல்லவில்லை.

**ஆவடி** ACA சபையில் **உங்களுக்கு ஏற்பட்ட** அனுபவம்தான் இவர்களின் ACA சபைகளின் தலைமை சபை **பாஸ்டர் சுந்தரம்** அவர்களின் சபையில் உதவி பாஸ்டர்களாக ஊழியம் செய்தவர்களில் ஒரு **பாஸ்டருக்கும்** ஏற்பட்டது. இந்த குறிப்பிட்ட பாஸ்டர் சில **மனஸ்தாபத்தால்** பாஸ்டர் **சுந்தரம் சபையிலிருந்து வெளியேறினார்**. பாஸ்டர் **சாம் சுந்தரம்** அவர்களின் மரணத்துக்கு முன் சபையில் ஏற்பட்ட அடிதடி சண்டையில் நாற்காலிகள் வீசப்பட்டு, சபை பூட்டப்பட்டு, பூட்டப்பட்ட வாசலில் **போலீஸ் படை** காவலில் நின்றதே அந்த சந்தர்ப்பத்தில் நான் குறிப்பிட்ட அந்த வாலிப பாஸ்டர் வெளியேறவில்லை. நாங்கள யாவரும் மதிக்கும் தேவ தாசன் ACA **தலைமை** பாஸ்டர் **சுந்தரம்** அவர்கள் **வாழ்ந்த காலத்தில்** நடந்த சம்பவத்தை தான் இப்போது நான் விளக்க வாஞ்ஜிக்கிறேன்.

நான் குறிப்பிட்ட அந்த பாஸ்டர் ACA சபையை விட்டு வெளியேறி இரண்டு வாரம் கழித்து **(சிலோன் பெந்தேகோஸ்தே)** TPM **சபையில்** போய் இணைந்தார். அவரை உதவி பாஸ்டர்களில் ஒருவராக TPM தலைமை பாஸ்டரும், கமிட்டியும் ஏற்றுக்கொண்டு சபையிலும் ஆராதனையில் சபை விசுவாசிகள் முன்பாக அவரை நிற்க வைத்து அறிமுகப்படுத்தினார்.

**சபை மேடையில்** பின் பகுதியில் **மற்ற ஊழியர்கள்** அமரும் இடத்தில் இவரையும் அமர வைத்தார்கள் **சுமார் நான்கு மாதங்கள்** கழிந்த பின் ஒருநாள் இவர் தலைமை பாஸ்டரிடம் பாஸ்டர் நான் இங்கு சபையில் சேர்ந்து **நான்கு மாதங்கள்** ஆகிறது. என்னை தாங்கள் எல்லா இடங்களுக்கும் அழைத்து சென்றீர்கள். ஆனால் எங்கும் **ஜெபிக்கக்கூட** நீங்கள் என்னை அனுமதிக்கவில்லை. **சிறுவர்களின்** ஊழியத்தை செய்யவும் அனுமதிக்கவில்லை என்று பரிதாபமாக கேட்டார். அதற்கு தலைமை பாஸ்டர் நீயாக இப்படி கேட்பாய் என்று எனக்கு தெரியும். அதற்காகத்தான் நானும் காத்திருந்தேன் தம்பி. உங்கள் **சாட்சி,** உங்கள் குடும்பத்திலிருந்து நீங்கள் **துரத்தப்பட்டது,** நீங்கள் **மனம் திரும்பி ஞானஸ்நானம்** பெற்று **அபிஷேகமும் அன்னியபாஷை** அடையாளத்தோடு பெற்றது யாவையும் கேட்டு தேவனை துதித்தேன். **திருமணம்** செய்ய ஏன் உங்களுக்கு **நாட்டமில்லை** என்று கூறிய உங்கள் காரணமும் மற்ற விஷயமும் உங்கள் ஊழிய **தகுதியை உறுதிபடுத்தியதால்தான்** நான் இங்கு உங்களை ஊழியத்தில சேர்த்துக் கொண்டடேன்.

ஆனால் **ஒரே ஒரு குறை** என்னவென்றால் நீங்கள் **கலியாணம் செய்த பாஸ்டர் கையில் ஞானஸ்நானம்** பெற்றது பெரும் குறையாக அறிவிக்கிறேன். இங்கு TPM சபை விசுவாசியாக வேண்டுமென்றாலும் எங்களைப் போல **கலியாணம் செய்யாத பிரதிஷ்டை** உள்ள எங்களைப் போன்ற **பாஸ்டர்கள் ஞானஸ்நானம்** கொடுத்திருந்தால்தான் நாங்கள் TPM **சபை விசுவாசியாக** சபையில் சேர்த்து, **கர்த்தருடைய மேசையில்** பங்குகொள்ள வைப்போம். அப்படியிருக்க நீங்கள் இத்தனை வருடம் ACA **சபையில்** பாஸ்டராக இருந்து **பலருக்கு நீங்கள் ஞானஸ்நானம்** கொடுத்து இரண்டு **கிராம கிளை சபையில்** பாஸ்டராக ஊழியம் செய்திருந்தாலும் எங்கள் சபையின் **சட்டத்தின்படி கலியாணம் செய்யாத** எங்களைப் போன்ற பாஸ்டர் கையில் நீங்கள் **ஞானஸ்நானம்** எடுக்காததால் நாங்கள் உங்களை பயன்படுத்தவில்லை என்றார்.

உங்கள் உயர்ந்த **டிகிரி படிப்பு, பாட்டு தாலந்து, வசன ஞானம்** ஆகிய எல்லா தாலந்தும் உங்களிடம் உண்டு. ஆகவே உங்களை நாங்கள் **இழக்க விரும்பவில்லை** என்று கூறி முடித்தார்.

உடனே இந்த வாலிப பாஸ்டர் இதை ஏன் நீங்கள் **ஆரம்பத்திலேயே கூறியிருக்க கூடாது?** என்றார். உடனே தலைமை பாஸ்டர் கூறினார் அப்படி நான் **ஆரம்பத்திலேயே** இவ்விவரத்தை கூறியிருந்தால் **அந்த நிமிடமே நீங்கள் ஓடிபோய் இருப்பீர்கள்.** உங்களை நாங்கள் **இழக்கவிரும்பவில்லை தம்பி.** எங்கள் சபைக்கு **உங்களைப்போன்று நல்ல தாலந்துகளை** பெற்றவர் வேண்டும் என்றார். அப்படியானால் **இப்போது நான் என்ன செய்ய வேண்டும்** என்று கேட்டார். உடனே பாஸ்டர் நீங்கள் **எங்கள் கையால்** மறுபடியும்

**ஞானஸ்நானம்** பெறவேண்டும். அதையும் உடனே **ஞானஸ்நானம்** கொடுக்கமாட்டோம். நீங்கள் **40 நாட்கள்** உபவாசத்திலிருந்து **திருமணம் செய்யாத** பாஸ்டர் ஊழியத்துக்கு உங்களை பிரதிஷ்டை செய்து உங்களை தகுதிபடுத்த வேண்டும். அதன்பின் **ஆவியானவர்** எங்களுக்கு அனுமதி கொடுத்த பின்தான் **உதவி பாஸ்டர் ஊழியத்தில்** உங்களை இணைப்போம் என்றார். இவர் பதில்ஒன்றும் கூறாமல் ஒருவாரம் அங்கேயே தங்கி, அதன்பின் ஒருநாள் இவர் தன் பெட்டியை எடுத்துக்கொண்டு TPM சபையில் யாரிடமும் சொல்லாமல் ஒரே ஒரு பாஸ்டரிம் மட்டும் நான் போய் வருகிறேன் என்று தலைமை பாஸ்டரிடம் கூறிவிடுங்கள் என்று கூறி TPM சபையை விட்டு வெளியேறி அவர் இன்று சென்னை அருகே ஒரு சிற்றூரில் எப்படியோ ஒரு தனி **சபை ஆரம்பித்து விட்டார்.**

கவனித்தீர்களா ! ACA **சபை பாஸ்டருக்கு** நேர்ந்த அவமானத்தை. இதே மாதிரி சம்பவம் நான் வசிக்கும் **சேலத்திலும்** நடந்தது. AOG சபையிலிருந்து வெளியேறிய பாஸ்டர் ஒருவர் **TPM சபையில்** சேர்ந்து சில மாதங்களிலேயே அந்த சபையை விட்டு வெளியேறி இப்போது **தனி சபையை** நடத்திக் கொண்டிருக்கிறார். பாஸ்டர் **காப்ரியேல்** அவர்களே ஒரு வேளை ACA **சபையைவிட்டு** விலகி TPM சபையில் சேர நினைத்தால் இன்னொரு முறை TPM சபையில் ஞானஸ்நானம் எடுக்க வேண்டும். அப்போதுதான் அவருக்கு ஊழியம் செய்ய அனுமதிப்பார்கள். இப்படிப்பட்ட ஆவடி ACA சபை உபதேசம் **ஒவ்வொரு பெந்தேகோஸ்தே** சபைக்கும் சென்று **ஞானஸ்நானம்** எடுத்தால் அது **குளியல் ஞானஸ்நானமாக** மாறும். இப்படிப்பட்ட **குளியல் ஞானஸ்நானம்** எடுக்கும் புது உபதேசம் வேத புஸ்தகம் அடிப்படையில் தவறானதாகும். ஒரே **ஒரு ஞானஸ்நானத்தை** நாம் விசுவாசிக்க வேண்டும். **இரண்டாம் ஞானஸ்நானம்** எடுக்கக்கூடாது.

எதற்கு இப்படிப்பட்ட உதாரணங்களை கூறுகிறேன் என்றால். **சென்னை** ACA **தலைமை** சபையின் வாலிப **பாஸ்டருக்கே** TPM **சபையில்** இந்த கதி என்றால் நீங்கள் கவனிக்க வேண்டியது. **ஆவடி** ACA **சபை பாஸ்டர் காப்பிரியேல்** ஆகட்டும் TPM **தலைமை பாஸ்டராகட்டும்** இருவரும் அன்று **பரிசேயர்,** தலைமை **ஆசாரியர்களைப்போல** மனுஷர் நியமித்த சட்டங்களை **நியாயப்பிரமான சட்டங்களைப்போல்** மாற்றி ஜனங்களை **பயமுருத்தி** வழி நடத்தினார்கள். அதைத்தான் **யோவான்** ஸ்நாகனும் **இயேசு கிறிஸ்துவும்** கண்டித்து பேசினார்கள்.

கடந்த இண்டு வருடங்களாக **லாக்டவுன்** (ஊர் அடங்கு) நாட்களில் யாரும் வெளியில் எங்கும் போக முடியாமல் போனது. **ஆலயம் பூட்டப்பட்டது. சபைகள் அடைக்கப்பட்டது.** ஒருவரை ஒருவர் **நேரில் பார்த்து பேசகூட முடியாமல்போன** அந்த கடினமான **இரண்டு வருடங்களில்** நவீன கருவியான **Youtube** வழியாகவும் **TV வழியாகவும்** பல **தவறான** உபதேசம்கொண்ட சபைகள் **பிரசித்திபெறலாயின.** அதிலே ஒன்று **ஆவடி ACA சபை**, மேலே கூறிய ஒருசில உபதேச தவறுகளை தவிர மற்றபடி **ஆவடி ACA சபை** நல்ல சபையாகும். அந்த கால கட்டத்தில் Youtube வழியாக (திருவிருந்து) **கர்த்தருடைய மேஜை** பரிமாரப்பட்டபோது **லாக்டவுன்** நாட்களில் இதே

பாஸ்டர் **காப்ரியேல் பெந்தேகோஸ்தே சபையில் ஞானஸ்நானம் எடுத்தவர்கள்** மட்டும் இதில் பங்கு கொள்ளலாம் என்று லாக்டவுன் நாட்களில் **அறிவிக்கவில்லையே!** காரணம் சபைக்கு போகமுடியாத **பெந்தேகோஸ்தேயல்லாத** மற்ற **சபை மக்களையும்,** வெளி நாட்டில் **உள்ளவர் களையும் கவர்ந்திழுக்க** ஞானஸ்நான உபதேசத்தை **அறிவிக்காமல் அடக்கி வாசித்தார்.** அதன் விளைவு இவர் **பாடல்,** இவர் **பிரசங்கம்,** இவர் நடத்திய **வேத பாடம்** யாவும் பல்வேறு உபதேசங்களைக்கொண்ட சபை மக்களை **கவர்ந்தது.** அதன் விளைவு **ஆவடி ACA சபை** மக்களின் எண்ணிக்கை பெறுகியது. **வருமானமும்** பெறுகியது. **லாக் டவுன் நீக்கப்பட்டவுடன்** பாஸ்டருக்கு தைரியம் வந்துவிட்டது.

அப்போதுதான் **பெந்தேகோஸ்தே** உபதேசம் வெறியாக மாறினது அதன்பின்தான் **ஞானஸ்நானத்தை** பற்றியும் **கர்த்தருடைய மேசையைபற்றியும்** மேற்கூறியபடி தவறாக வெளியரங்கமாக பேச வைத்தது. அதோடு **பலகோடி** ரூபாய் செலவாக்கி **மிகப் பெரிய சபை கட்டிடம் பெருகி உயர்ந்தது. லாக்டவுன்** சமயத்ததில் பாஸ்டர் கூறியதாவது, நான் யாரிடமும் கையெந்தாமலே **யாரிடமும் பணம கேட்காமலே** கர்த்தரே பல **கோடி ரூபாய்களை ஒவ்வொரு முறையும் தக்க சமயத்தில்** பணம் அனுப்பினார் என்றார்.

அதன்பின் நாலுமாவடி மோகன் சி. லாசரஸ்சை கூட்டி வந்து ஆலய கட்டிடத்தில் நின்று ஜெபிக்க வைத்தார். அதன் விளைவு **மோகன் சி, லாசரஸ்** தன் **பத்திரிகையில எழுதியதுபோல** பாஸ்டர் **கேப்ரியல் 1 லட்சம் கொடுக்கும் 50,000 நபர் வேண்டும், 10 லட்சம்** கொடுக்கும் நபர்கள் இத்தனைபேரட வேண்டும் என்று ஏலம் விடுவதுபோல் சபையில் **அறிவிக்கிறார்.** தேவையான சமயத்தில் **தேவையான கோடி ரூபாய்களை கர்த்தரே அனுப்பினார், தொடங்கியவரே முடிப்பார்** என்றவரின் அந்த **விசுவாசம்** எங்கே போனது? மேலும் 1 லட்சம் கொடுக்கும் நபர் **பெந்தேகோஸ்தே சபையில் ஞானஸ்நானம்** பெற்ற விசுவாசிகளாக இருக்க வேண்டும் என்று **கூறவில்லையே ஏன்** ? **பணம் யார்** கொடுத்தாலும் **வாங்கும் அளவு பாஸ்டரின்** விசுவாசம் கீழ்நோக்கி பாதாளம் வரை போய்விட்டதே !

2022 **மார்ச்** மாத ஆராதணையில்தான் **விசுவாசத்தைப்**பற்றி மிகத் தெளிவாக வசன ஆதாரத்தோடு பேசினார். நானே அதைக் கேட்டு பூரித்துப்போனேன்.

**பணம்** தேவை என்ற சூழ்நிலை வரும்போது பணம் கொடுப்பவன் **CSI யாக** இருக்கலாம், **கத்தோலிக்கனாக** இருக்கலாம், **லூத்தரன்** சபையாக இருக்கலாம். அவன் **இரட்சிக்கப்படாத குடிகாரனாககூட** இருக்கலாம். அப்படி தானே ! இப்படி சபை கட்ட **எப்படிப்பட்டவர் பணம் கொடுத்தாலும்** வாங்கலாம். என்பது எத்தனை மோசமான விசுவாசம். பணம் கொடுப்பவர் பெந்தேகோஸ்தே சபையில் ஞானஸ்நானம் பெற்றவராக இருக்கவேண்டும் என்ற உபதேசம் அறிவிப்பு எங்கே போனது?

**சபை கட்ட பணம்** சேகரிப்பது என்பது என்ன **திருப்பதி உண்டியலா**? அந்த உண்டியல் **கருப்பு,** சிகப்பு **வெள்ளை** என்று எந்த நிறத்தில் உள்ள **பணமாக இருந்தாலும் அந்த உண்டியல்**

**தடுக்காது. விபச்சாரத்தில்** கிடைத்த பணத்தில் **தசம பாகமாக** கொஞ்சம் பணம் எடுத்து போடுகிறேன் என்றாலும் பணம் போடு என்று அது அந்த உண்டியல் தன் வாயை திறந்தே வைக்கும், ஆனால் பரிசுத்த சபை கட்டிடத்துக்கு அப்படிப்பட்ட பணத்தை கர்த்தர் அங்கீகரிக்கவே மாட்டார்.

நான் CSI **சபையை** சேர்ந்தவன்தான் . ஆனால் **வசனப்படி** ஜீவிக்கிறவன், **சபையின் சட்டம்** வேத வசனத்துக்கு **விரோதமாக இருந்தால்** நான் அதை **மீறுவேன்.** அதன் **விளைவுகளையும்** ஏற்றுக்கொள்ள **நான் என்னை ஆயத்தப்படுத்திக்கொண்டேன்.** CSI அல்லது **லூத்தரன்** சபையில் **கன்வென்ஷனில்** நான் பிரசங்கித்தாலும் **சபையை புதுப்பிக்க** போகிறோம் என்றும். அதற்கு **பணம்** வசூலிக்க போகிறோம் என்றும் என் முன்னால் **சபை செயலர்** அறிவிப்பு கொடுத்தால். அதன்பின் நான் பிரசங்கிக்கும்போது **சபை கட்டிட பணிக்காக புறமதத்தினரிடம்** பணம் சேகரிக்காதீர்கள், அவர்களாகவே கொடுத்தாலும் **வாங்காதீர்கள்** என்று பகிரங்கமாக பிரசங்கித்திருக்கிறேன்.

என் ஊழியத்துக்கு எனக்கு காணிக்கை அனுப்புங்கள் என்று என் பத்திரிகையான ஜாமக்காரனில் ஒருபோதும் **எழுதியதேயில்லை.** வாசகர்களுக்கு அடிக்கடி தனி அறிவிப்பாக நான் எழுதுவது என்னவென்றால் **மனம் திரும்பாதவர்கள் & குடியை நிறுத்தாதவர்கள், சாட்சி இல்லாதவர்கள்** தயவுசெய்து எனக்கு **காணிக்கை அனுப்ப வேண்டாம்** பகிரங்கமாகஎன்று எழுதி அறிவித்தவன் நான். அதை வாசித்து பலர் எனக்கு **காணிக்கை அனுப்புவதையே திடீர் என்று நிறுத்திவிட்டார்கள்.** டாக்டருக்கு பணத் **திமிர் அதிகம்** என்று கோபப்பட்டு பணம் நிறுத்தியவர்கள் பல வருடங்களாக என் வாசகர்களாக தொடருகிறார்கள். நான் அங்கம் வகிக்கும் **CSI சபையில்** எனக்கேற்ற ஆவிக்குறிய ஆகாரம் கிடைப்பதில்லை. நான் இரட்சிக்கப்பட்டு, **ஆவியானவரின் நிறைவை** எப்போது பெற்றேனோ அப்போதிருந்து என் **ஆவிக்குறிய வளர்ச்சிக்கேற்ற** ஆத்ம ஆகாரத்தை ஒவ்வொரு நாள் **என் தனிப்பட்ட வேத வசன தியானத்திலேயே** ஆவியானவர் **எனக்கு கற்றுத் தருகிறார்.**

ஆகவே **கேள்வி கேட்ட சகோதரனே !** நான் இப்போது எழுதியது விளங்கியிருக்கும் என்று நினைக்கறேன். **நானும்** என் **மனைவியும் லாக் டவுன் சமயம்** ஆவடி ACA **சபை ஆராதனை செய்தியைத்தான்** கேட்டோம். நீங்கள் அந்த சபைக்குபோவது **ஆத்தமாவுக்கு** பிரயோஜனமானால் அந்தசபையில உள்ள **நலமானதை பற்றிக்கொண்டு. வேத வசனமும் உங்கள் மன சாட்சியும்** என்ன உணர்த்துகிறதோ அதை செய்து உங்கள் **தனிப்பட்ட ஜெப நேரத்தில் வேத வசனத்தை** தியானித்து, **ஆவிக்குறிய ஜீவியத்தில்** வளருங்கள். நீங்கள் **இரட்சக்கப்பட்டிருப்பதால்** உங்ளுக்குள் உள்ள (எபி.1:13) **ஆவியானவர்** உங்களை நிச்சயம் வழி நடத்துவார். **மேற்கொண்டு சந்தேகங்கள் இருந்தால்** எனக்கு எழுதி அனுப்புங்கள். நான் பதில் அனுப்புகிறேன் அல்லது தொலைபேசி வழியாக கேளுங்கள் நான் பதில் கூறுகிறேன்.

# ஜாமக்காரன் Youtube எச்சரிக்கை

ஜாமக்காரனில் youtube & whatsapp என்று எனக்கு எதுவும் இல்லை என்று ஏற்கனவே அறிவித்துள்ளேன். ஆனால், இப்போது ஜாமக்காரன் CID தமிழ், மற்றும் ஜாமக்காரன் பெயரில் இன்னும் சில வார்த்தைகளை சேர்த்து நான்கு, ஐந்து தவறான youtube வெயிடப்படுவதாக அறிந்தேன். அதில் அநேக ஊழியக்காரர்களை குறித்து கெட்ட வார்த்தைகளை பேசுவதை நான் கேள்விப்பட்டேன். **அத்தகைய youtubeவிற்கும் எனக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. அதை வெளியிடுபவரை நான் நேரில் பார்த்ததும் இல்லை. கேள்விப்பட்டதும் இல்லை.** மேலும் எனக்கு மொபைல் பழக்கமும் இல்லை. இப்போது சில காலம் மாத்திரம் மொபைல் வைத்திருக்கிறேன். அதிலே incoming & outgoing Callகள் மட்டும் நான் உபயோகிக்கிறேன். எனக்கு வேறு எந்த விஷயத்தையும் மொபைலில் பார்க்க தெரியாது.

ஆகையால் வாசகர்கள் என் பெயரில் வருகிற இப்படிப்பட்ட தவறான செய்திகளை நம்பாமல் மட்டுமல்லாது என்னிடம் கேட்டு விசாரித்துக்கொள்ளுங்கள்.

அப்படிப்பட்ட youtube செய்திகள் கர்த்தருடைய நாமத்தை தூஷிக்க ஏதுவாக இருக்கிறது. அந்த தவறான youtube வெளியிடுபவர்களுக்காக ஜெபியுங்கள்.

**– ஜாமக்காரன்**

**MAY 2022**

# Printed Book (Periodical)

**RNI Reg. No. TNBIL/2016/70171**

**Annual Subscription:**
**India - Rs.60/**
**Foreign - Rs.600/**

***Return Requested:***

**Dr.PUSHPARAJ**
**SALEM - 636 005**
**INDIA.**

Printed at P.M.Press,168,Arumuga Nagar, Salem-636 015
Edited & Published by **Dr.Pushparaj,** 89.Majeeth Street,
Old Suramangalam, Salem - 636 005. Tamil Nadu.INDIA.